விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

UNION
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலவசவைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-474)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 23 வெள்ளிக்கிழமை (09.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை

அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய தீர்மானங்கள் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

பொதுமக்கள் அச்சம் கொண்டு அத்தியாவசிய உணவுப் பொருட களை தேவைக்கு மேலதிகமாக கொள்வனவு செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வர்த்தகத்துறை

23

ஆடைத் தொழிற்சாலையில் 1053 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

மினுவாங்கொட 23

சிலாபத்தில் நோயாளிக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

சிலாபம் ஆரம்ப வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு கொரோனாவைரஸ் தொற்று உள்ளமை

23

மினுவாங்கொட பொலிஸ் நிலையம் முடக்கம்

(கொழும்பு)

மினுவாங்கொட பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அனைவரும், பொலிஸ் நிலைய வளாகத்திற்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மினுவா 23

கொரோனாவின் வீரியம் அதிகரிப்பு

48 மணித்தியாலங்கள் இலங்கைக்கு சவாலானது

இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கம்பஹா கொத்தணி கொரோனா தாக்குதலின் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் முக்கியமானவை என இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதன் நிமித்தம் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானமிக்கதும் சவாலானதுமானது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

மன்னார், கிளிநொச்சி பகுதிகளில் ரயில் மோதியதில் இருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், சௌத்பார் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் 23

வவுனியாவில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்து

இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, மடுகந்தைப் பகுதியில் வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து ஹொரவப்பொத்தானை நோக்கி வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள் மழை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை 23

யாழ்.பல்கலையில் பதற்றம்

மாணவர்கள் போராட்டம்; பொலிஸார் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதல் உச்சக்கட்டத்தையடைந்தபோது சமரச முயற்சியில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா மற்றும் பல 24

மது விற்பனை செய்யும் உணவகங்களுக்கு பூட்டு

தவறணைகளையும் மூடுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

மதுபானங்களை விற்பனை செய்யும் உணவகங்கள் மற்றும் கள்ளுத் தவறணைகளை மூடுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலைமை 23

வாள்வெட்டுடன் தொடர்புடைய ஒருவர் யாழில் நேற்று கைது

பிரான்ஸில் இருந்து கட்டளையிடப்பட்டே யாழில் பல வன்முறைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற வாள் வெட்டு வன்முறைகளுடன்தொடர்புடைய ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் 23

வடக்கு, கீழக்கு ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும்

கல்வி அமைச்சர்

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற 23

அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும்

சுகாதார நடைமுறையை கட்டாயம் கடைப்பிடியுங்கள்

அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

கமபஹா மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய 23

கார், முச்சக்கரவண்டியில் 2 பயணிகளையே ஏற்றலாம்

அரசு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து, புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, தனியார் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் கார் மற்றும் முச்சக்கர வண்டியில் அதிகபட்சம் இரண்டு பயணிகளை மட்டுமே ஏற்ற முடியும்.

பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் வாகனங்களில், மொத்த திறனில், 50 சதவீதத்தை மட்டுமே கொண்டு செல்ல முடியும்.

கூடுதலாக, உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், பேரணிகள், பொதுக்கூட்டங்களும் தடைசெய்யப்பட்டுள்ளது.

சினிமா தியேட்டர்க்கள், கசினோக்கள் மற்றும் கிளப்புகள், சூதாட்டங்கள், மசாஜ் பார்லர்கள் திறக்க தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்கள் ஒக்டோபர் 31 வரை செல்லுபடியாகும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ம-03)

பாராளுமன்ற உறுப்பினரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு

கொரோனா தொற்று இல்லை

சபாநாயகர் மகிந்த யாப்பா

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்ற உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெளிவுபடுத்தியுள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தவில் உள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் கீழ் பாராளுமன்ற சேவை பிரிவுடன் இணைந்த ஒரு ஊழியரின் குடும்ப உறுப்பினரே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நோயாளி எனவும் பாராளுமன்ற உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவிருந்த மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சுரங்கனி எல்லவாலா, கே.பி. சில்வா மற்றும் ஆர்.ஆர்.டபிள்யூ. ராஜபக்ச ஆகியோரின் அனுதாபப் பிரேரணைகள் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்ற அமர்வுகளை இன்று மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற அலுவல்கள் குழு முடிவு செய்துள்ளது. (இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே) (ம-03)

பொது அமைப்புக்களுக்கான அறிவித்தல்

தங்கள் அமைப்புக்களால்

வலம்புரி - சங்குநாதம்

நாளிதழுக்கு அனுப்பி வைக்கின்ற அறிக்கைகள், செய்திக் குறிப்புகள், கட்டுரைகள், புகைப்படங்கள் ஆகியவற்றை

E-mail : Valampurii@yahoo.com
Viber : 076 636 3378

என்பவற்றுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தனிப்பட்டவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் எந்த விடயமும் உறுதிப்படுத்தப்படாதவையாகவே கருதப்படும் என்பதால், குறித்த அமைப்புக்களின் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பரிமாற்றத்தினூடாக அனுப்பப்படுகின்ற விடயங்களே கவனத்தில் எடுத்துப் பிரசுரிக்கப்படும்.

நிர்வாகம் - வலம்புரி

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3128, 021 222 3378

தாக்குதலில் ஈடுபட முயற்சித்த நால்வர் கைதாகி மறியலில்

கிளிநொச்சியில் சம்பவம்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் மூன்று வெவ்வேறு தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட முயற்சித்த வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்த 4 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 14 நாட்கள் தடுப்பு காவலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி அரச புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக் கையின்போது குறித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். குறித்த நபர்களிடமிருந்து நான்கு வாள்களும் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, வள்ளிபுனம் ஆகிய பகுதிகளில் குடும்பத்தவர்கள் சிலரை தாக்குவதற்கு திட்டமிடப்பட்டு வருகை தந்திருந்த நிலை யில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் கிளிநொச்சியை சேர்ந்த வட்டக்கச்சி, பரந்தன், செல்வாநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரி வித்துள்ளனர். (ம-03,100)

கொரோனா நிலையை பயன்படுத்தி பாரிய ஊழல் மோசடிகள்

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்

எஸ். எம். மரிக்கார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கோவிட் 19 தொற்று நிலைமையை பயன்படுத்தி பாரியளவிலான ஊழல், மோசடிகள் இடம்பெறுவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை மையில் இலங்கை முதலீட்டு சபையி னால் சகல தொழிற்சாலைகளுக்கும் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. அந்தக் கடிதத்தில் தொழிற்சாலை யில் பணியாற்றுபவர்களில் வாரத்திற்கு 5 வீதமானவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோத னைகளை நடத்த வேண்டுமென அறி விக்கப்பட்டுள்ளது.

அதற்காக நான்கு தனியார் வைத்தி யசாலைகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. நாட்டிலுள்ள தொழிற்சா லைகளில் 10 இலட்சம் வரையான ஊழிய ர்கள் பணியாற்றுகின்றனர். அவ்வாறா யின் வாரத்திற்கு 50 ஆயிரம் பரிசோத னைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் அந்தளவுக்கு பரிசோத னைகளை செய்வதற்கான உபகரண ங்கள் இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. அதேபோன்று இந்த விட யத்தில் அரசாங்கம் ஒத்துழைக்காது தனியார் வைத்தியசாலைகளுக்கு அத னை வழங்கியிருக்கின்றது.

அதன்பிரகாரம் ஒரு பரிசோதனைக்கு 6 ஆயிரத்து 500 ரூபா என்ற அடிப்ப டையில் பார்த்தால் வாரத்திற்கு 325 மில்லியன் ரூபாவை செலவழிக்க வேண் டியுள்ளது.

இதற்கான உபகரணத் தொகுதிகளை கொண்டுவரவும் நடவடிக்கையெடுக்க ப்பட்டுள்ளது. இதன்படி இது அதிக இலாபத் தை சம்பாதிக்கும் ஒன்றாகவும் அமைய லாம் என்றும் கூறினார். (ம-03)

பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் பிற்போடல்

10.10.2020 சனிக்கிழமை நடைபெறவிருந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் தற்போதைய COVID-19 சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. மீள நடை பெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

அதிபர்
யா/ஹாட்லிக் கல்லூரி
(C-494)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ராஜ் ஜுவல்லர்ஸ்

Best Choice

அடகு பிடிப்பவர்கள்

1 பவுண் — 22 கரட்டிற்கு 80,000/-

முக்கிய அறிவித்தல்

05.10.2019 ஆம் திகதி தொடக்கம் 12.12.2019 ஆம் திகதி வரை (பற்றுச் சீட்டு இலக்கம் 38,000 இற்கு மேற்பட்ட) வைக்கப்பட்ட அடகுகளை 15.12.2020 இற்குள் மீட்டுக் கொள்ளவும் அல்லது முழு வட்டியையும் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும். தவறின் 15.12.2020 இற்கு பின் விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன்பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (4210)

இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)
Tel : 021 221 7287, 076 636 1238

12 வயதுச் சிறுவனை படையணியின் தளபதி என்பதா?

பொன்சேகா மன்னிப்புக்கோர வேண்டும்-சிவாஜி சீற்றம்

“(கொழும்பு) இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொண்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடுதலைப் புலிகளின் தலைவரின் மகன் சிறுவர் படையணியின் தளபதி என கூறியதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.”

அரசாங்கத்தின் ஆட்சியாளர்களை சர்வதேச நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என வும் கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொண்டவர் பீல்ட் மார்ஷல் பொன்சேகா. இது இவ்வாறு இருக்கும்போது போர்க்குற்றங்களையும் இனப்படுகொலைகளையும் மூடிமறைக்கின்ற பிரயத்தனத்தில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

அதிலும் குறிப்பாக ராஜபக்ஷக்கள் எல்லோருமே இதனை மூடி மறைப்பதற்கு பல முரண்பட்ட விடயங்களைத்தான் கூறி வருகின்றார்கள்.

பாராளுமன்றத்தில் விடுதலைப்புலிகளின் தலைவரின் மகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட், தண்ணீர் கொடுத்துவிட்டு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செல்வராசா கஜேந்திரனின் கருத்துக்கு, அப்போதைய இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் பொன்சேகா தற்போது கூறியுள்ள கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது.

12 வயது நிரம்பாத சிறுவனைப் பார்த்து சிறுவர்களின் படைத்தளபதி என்று கூறியுள்ளார். சாதாரணமாகவே 18 வயதுக்குட்பட்டவர்களை சிறுவர்கள் என்று அழைப்பார்கள். அவ்வாறான நிலையில் 12 வயது நிரம்பாத சிறுவனை, சிறுவர் படைத்தளபதி என்று ஒரு இராணுவத் தளபதியாக இருந்தவர் தான் தெரிவித்தார்.

காட்டுமிரண்டித்தனமான கோரமுகத்தைக் கொண்ட ஆட்சியாளர்களுக்கு முண்டுகொடுத்தவர்கள் இவர்கள். போர்க்குற்றங்கள், இன அழிப்புக்களை தீவிரப்படுத்தாது நல்லாட்சி என்று கூறியவர்கள் தொடர்ச்சியாக மூன்று ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை தவறாக வழிநடத்திய தமிழ்த் தலைவர்கள் என எமது மக்கள் விளங்கிக்கொண்டுள்ளனர்.

இன்றைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் மற்றும் கருத்துக்கள் மூலம் இதனை எமது மக்கள் விளங்கிக்கொள்கிறார்கள். 12 வயது சிறுவனை சிறுவர் படையணியின் தளபதி என்றால் மூன்று வயது, ஐந்து வயது கொண்ட சிறுவர்களையும் சிறுவர் படைகள் இருந்தது என்று கூறுவீர்களா?

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சஜித் பிரேமதாஸ சரத் பொன்சேக்காவை கட்டுப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி அவர் கூறிய கருத்துக்கு மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

ஒருநாளில் மட்டும் 5608 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

இலங்கையில் ஒரே நாளில் மிக அதிகளவு கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று மொத்தம் 5608 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் கடந்த 3 நாட்களில் இனங்காணப்பட்டுள்ளதை அடுத்து தொழிற்சாலை பணியாளர்கள், அவர்களுடன் தொடர்புடையோர் உள்ளிட்டவர்களை தேடிக் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தி பரிசோதனை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நாடெங்கும் அதிக தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (நி-7)

குணமடைந்தோர் 3278



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 4 பேர் குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 278 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 3 ஆயிரத்து 278 பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ள நிலையில், கொரோனாத் தொற்றுக்கு உள்ளான ஆயிரத்து 168 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம் இந்த தொற்று காரணமாக நாட்டில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் காணொளிப் பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

18 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது. அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, அதற்கு எதிர்ப்பை தெரிவித்து அவர்களது நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார். (ஜ-4)

பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

சர்வதேசத்துடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களாலும் நாட்டுக்கு நன்மையைவிட பாதிப்பே அதிகமாகும். அத்துடன் ஊரடங்கு சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கு அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை எனத் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பான சபை ஒத்துவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கின்றன. அதேபோன்று சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்திருக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் அனைத்தையும் பார்க்கும்போது அவற்றினால் நாட்டுக்கு நன்மை கிடைத்ததை விட பாதிப்பே ஏற்பட்டுள்ளது. இந்த நிலை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது நாட்டுக்கு தேசிய கொள்கை ஒன்று இல்லாமையாகும்.

அன்றாடம் உழைத்து வரும் இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு அரசாங்கத்தினால் எந்த வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை உடனடியாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

போதைப்பொருள் வர்த்தகம் முற்றாக ஒழிக்கப்படும்- பிரதமர் வாக்குறுதி

(கொழும்பு)

தற்போது இணையம் மற்றும் சமூக வலைத்தள பயன்பாட்டின் ஊடாக கஞ்சா தொடர்பில் சாதாரண மக்கள் மத்தியில் நேர்மறையான அணுகு முறைகளை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நபர்கள் செயற்பட்டு வரு கின்றமையை காணக்கூடியதாக உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பாராளுமன்ற உறுப்பி னர் புத்திக பத்திரன எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரை யாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"மதுபானம், சிகரெட் மற்றும் போதைப்பொருள் என்பன இன் றளவில் உலகம் முழுவதும் பரவிவரும் ஒரு தொற்றாகும்.

எவ்வாறாயினும் இதுவரை சுகாதார காரணங்கள் மற்றும் பொருளாதார தாக்கத்தை உணர்ந்து கொள்வதன் மூலம் தற்போதைய சமூகம் சிகரெட் பாவனையிலிருந்து ஒதுங்கி காணப்படுவது மகிழ்ச்சியான விடயம்.

புகையிலை மற்றும் மது பானம் மீதான தேசிய அதி காரசபை உள்ளிட்ட தரப்பின ரின் நீண்டகால முயற்சியின் பலனாக இன்றளவில் சிகரெட் பாவனை குறைந்துள்ள மையை சமூகத்தில் காண க்கூடியதாக உள்ளது.

எனினும், தற்போது இணை யம் மற்றும் சமூக வலைத்தள பயன்பாட்டின் ஊடாக கஞ்சா தொடர்பில் சாதாரண மக்கள் மத்தியில் நேர்மறையான அணுகு முறைகளை ஏற்படுத் தும் வகையில் பல்வேறு நபர் கள் செயற்பட்டு வருகின்றமை காணக்கூடியதாக உள்ளது.

கஞ்சாவினை சட்டபூர்வ மாக்குவதற்கு எந்தவொரு நிறு வனத்திற்கும் இடமளிக்கப்பட வில்லை. பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மருத் துவ நடவடிக்கைகளுக்காக கஞ்சா வளர்ப்பிற்கும், இறக்குமதி செய்வதற்கும் கோரியுள்ள னர்.

அதற்கு மேலதிகமாக ஆயுர் வேத திணைக்களத்தின் ஊடா கவும் அவர்களுக்கு தேவை யான உள்நாட்டு ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பிற்கு உரிய தரத்துடனான கஞ்சா பெற்றுக் கொள்வதற்கு அதனை வளர் ப்பதற்கு அனுமதி கோரியுள் ளனர்.

அதனால், 1984ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க ஆப த்தான ஒளடத கட்டுப்பாட்டு தேசிய சபை சட்டத்தின் 8 ஆவது பிரிவிற்கமைய இலங் கையில் கஞ்சா செடி வளர்ப்பு மற்றும் அது தொடர்பான உற் பத்திகளை மேற்கொள்வ தற்கான வாய்ப்பு மற்றும் அதன் மோசமான தாக்கங்கள் தொட ர்பில் ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று உருவாக்கப்ப ட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் கல்விசார் வேலை த்திட்டங்களை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழி ற்பயிற்சி நிலையங்கள், பணி யிடங்கள் உள்ளிட்ட குறிப்பி டத்தக்க சமூக குழுக்களுக்கு விழிப்பூட்டும் வேலைத் திட்ட ங்களை முன்னெடுத்து வரு வதுடன், பாடசாலை ஆசிரி யர்கள் மற்றும் ஆசிரிய ஆலோ சகர்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

அதியுயர் அபாய வலயமாக வெயாங்கொட பிரதேசம்

(கொழும்பு)

அதிஉயர் அபாய வலயமாக வெயாங்கொட பிரதேசம் அறி விக்கப்பட்டுள்ளது.

மிக அதிகளவான கொரோ னாத் தொற்றாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளதை யடுத்து வெயாங்கொட பிரதே சம் அதி உயர் அபாய வலய மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அவர்களு டன் தொடர்புடைய அதிகள விலான எண்ணிக்கையில் கொரோனா தொற்றாளர்கள் தற்போது அடையாளம் காணப் பட்டுவரும் நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள் ளது. (ஜ-4)

சேவ் த பேர்ள் நிறுவனம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த ரி.ஐ.டி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தலைமை வகித்த சேவ் த பேர்ள் எனும் அரச சார்பற்ற நிறுவனம் தொடர்பில் ரி.ஐ.டி. பிரிவு ஊடாகவும் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக சி.ஐ.டி. கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. இந்நிலையில் சி.ஐ.டி. ஏற்க னவே நிறைவு செய்துள்ள விசாரணையின் கோவை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட் டுள்ள நிலையில் அது தொட ர்பில் இன்னும் ஆலோசனை கிடைக்கவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தின் விஷேட விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் தீபானி மெனிகே கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு அறி வித்துள்ளார்.

இந்நிலையில், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் கடந்த தவணையின் போது, கட்டார் சரிட்டி நிறுவனம் ஊடாக ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தலைமை வகித்த சேவ் த பேர்ள் நிறுவனத்துக்கு பணம் கிடைத்துள்ளதாகவும், கட்டார் சரிட்டி நிறுவனத்தை சட்ட விரோத நிறுவனம் என்று அடையாளப்படுத்த முற்படு வதன் ஊடாக சி.ஐ.டி., கர்தி னால் மல்கம் ரஞ்சித் ஆண் டகையையும், பொது மக்களை யும் தவறாக வழி நடத்த முற்ப டுவதாக ஹிஜாஸ் ஹிஸ்புல் லாஹ்வின் சட்டத்தரணி ஹபீல் பாரிஸ் நீதிமன்றின் கவனத் துக்கு கொண்டு வந்தார். (ஜ-4)

கடலாமையுடன் ஒருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் பகுதியில் களப்பில் நீருக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடலாமை உயிருடன் மீட்கப்பட் டுள்ளது.

புத்தளம் பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பொலிஸாருடன்இணைந்து நேற்று களப்பில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது குறித்த கடலாமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் முள்ளிபு ரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார். (ஜ-4)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்		சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	100-120	120
உருளைக்கிழங்கு	140	140	150
பச்சைமிளகாய்	180	200	200
தக்காளி	160	160	200
மரவள்ளிக்கிழங்கு	80	200	80
கோவா	120	120	120
கரட்	180	180	200
பூசணி	40	70	80
புடோல்	80	80	120
வாழைக்காய்	50	60-80	100
சின்ன வெங்காயம்	200	200-220	240
பெரிய வெங்காயம்	180	200	240
பாகற்காய்	200	200	250
வெண்டிக்காய்	80	60	80
கருணைக் கிழங்கு	100	100-120	120
பயற்றங்காய்	100	70-80	120
லீக்ஸ்	100	100	100
பீற்றூட்	80	100	100
கறிமிளகாய்	200	240	300
முருங்கைக்காய்	150	100-120	100
போஞ்சி	200	220	280
கத்தரிதம்புள்ள	80	120	80
கீரை - 1 பிடி	40	50	40
தேசிக்காய்	120	120	160
தேங்காய் (ஒன்று)	80	70	60-80
இராசவள்ளி	300	--	--
வெங்காயப்பூ	200	--	--
முள்ளங்கி	80	70	80
பொன்னாங்காணி	40	50	30
வல்லாரை	15	20	30
ஈரப்பலா	60	--	--

மஞ்சளுடன் மூவர் கைது

(கொழும்பு)

உடப்பு பூனைப்பிட்டிய மற்றும் சின்னப்பாடு ஆகிய பகுதியில் நேற்று மற்றும் நேற்று முன்தினம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 1700 கிலோ கிராமிற்கும் அதிக மஞ்சள் கட்டிகளுடன் மூவர் உடப்பு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மஞ்சள் இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட நிலையில் வாகனங்கள் மூலம் வேறு இடங்களுக்கு ஏற்றிச் செல்ல முற்பட்ட போது 1297 கிலோ கிராம் மஞ்சள் கொண்ட 27 உரைகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இயந்திரப் படகு மற்றும் லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டது. (ஜ-4)

நியூடயமண்ட் கப்பலின் கப்டன் மீது குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

கடற்பரப்பில் தீவிபத்துக்குள்ளான எம்.ரி.நியூடயமண்ட் கப்பலின் கப்டனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஜ-4)

ஆடைத் தொழிற்சாலை குறித்து சுயாதீன விசாரணைகளுக்கு உத்தரவு

- நிமால் சிறிபால -

(கொழும்பு)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளுமாறு நிமால் சிறிபால டி சில்வா, தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முதலாளிமார்கள், தனியார் துறை தொழிற்சங்க பிரதிநிதிகள், தொழில் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அரசாங்கம் வெளியிட்டுள்ள சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய, அந்த தொழிற் சாலையின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பதை ஆராய்வது இதன் நோக்கமாகும் என அமைச்சின் செயலாளர் எம்.பீ.யூ.டீ.கே. மாபா பத்திரன தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொரோனா வைரஸ் பரவலின்போது முதலாளிமார், தனியார் பிரிவு தொழிற்சங்கம் மற்றும் தொழில் அமைச்சு இணைந்து கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாகவும் இந்த கலந்துரையாடலின்போது அவதானம் செலுத்துப்பட்டுள்ளது. (ஜ-4)

மின்சார சபைக்கு பாரிய நட்டம்

(கொழும்பு)

கடந்த 2015 தொடக்கம் 2019 வரையில் இலங்கை மின்சாரசபை 181.4 பில்லியன் ரூபாய் நட்டத்தை சந்தித்துள்ளதாகவும், தேசிய மின் உற்பத்தி நிலையங்கள் எதுவும் இந்தக் கால எல்லைக்குள் புனரமைக்கப்படாதமையும், மின்சார கட்டணங்களில் எந்தவித மாற்றங்களும் செய்யாதமை மற்றும் மின்சார சபைக்கு அளவுக்கு அதிகமான ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமையுமே பிரதான காரணம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல வினாக்கான விடைகள் நேரத்தில் இலங்கை மின்சார சபை எதிர்கொண்டு வருகின்ற நெருக்கடிகள், நட்டம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் தெரிவித்த மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறுகையில்,

இந்த நெருக்கடிக்கு நீர்மின் உற்பத்தியில் ஆர்வம் காட்டாமை, டீசலுக்காக மாத்திரம் 100 பில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான தொகையை செலவு செய்துள்ள போதிலும் மின்சார கட்டணத்தில் விலை அதிகரிப்பு செய்யாதமை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2013 ஆம் ஆண்டு நுரைச்சோலைக்- விஜய மின்நிலையம் உருவாக்கப்பட்ட பின்னர் இன்னமும் எந்தவொரு மின் உற்பத்தி நிலையமும் புனரமைக்கப்படவில்லை.

மாறாக டீசல் பாவனையில் மின் உற்பத்தி செய்யப்பட்டே வருகின்றது. இதற்காக ஒரு அலகு மின் உற்பத்திக்கு 23.29 ரூபாய்கள் செலவானாலும் மக்களிடம் ஒரு அலகு மின்னுக்காக 16.83 ரூபாய் என்ற அடிப்படையில் அறவிடப்படுகின்றது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அனைத்துமே அதிகரித்துள்ள போதிலும், மின் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. அதேபோல் மின்சார சபையின் பல்வேறு செயற்பாடுகள் தனியார் மயப்படுத்தப்பட்டு வருகின்றமையும், அளவுக்கு அதிகமான ஊழியர்கள் இருப்பதும் கூட மின்சார சபை நட்டத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

இன்றுவரை 26 ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் உள்ளனர். எனவே இந்த செயற்பாடுகள் காரணமாகவே இலங்கையில் மின்சார சபை நட்டத்தில் இயங்கிக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

42 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கட்டாரில் சிக்கியிருந்த மேலும் 42 பேர் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

நாடு திரும்பியவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொரோனா தொற்று ஒழிப்பிற்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது. (ஜ-4)

முல்லைத்தீவில் இருவர் தனிமைப்படுத்தல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கொரோனா வைரஸ் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

சபையின் தவிசாளர், செயலாளர்கள், பொதுப்போக்குவரத்து சம்பந்தமான தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள் மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். அங்கு கொரோனா வைரஸ் தொடர்பில் கருத்துக்களை தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு வருகை தந்த வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவரும் சுகாதார திணைக்கள ஊழியர் ஒருவருமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனைவிட கேப்பாபிலவு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையங்களில் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த ஒரு தொகுதியினர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ஜ-4-281)

பட்டா- ஆட்டோ விபத்து பெண் ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் பட்டா ரக வாகனமும் - ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா, பண்டாரிக்குளம், அம்மன் கோவில் வீதியில் இருந்து பாடசாலை வீதிக்கு திரும்பிய பட்டா ரக வாகனமும், பாடசாலை வீதி ஊடாக வைரவ புளியங்குளம் நோக்கி வந்த ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் ஆட்டோவில் பயணித்த வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து குறித்து வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4-250)

வேலையிலிருந்து வீடு நோக்கி விழிப்புணர்வு மிதிவண்டிப் பயணம்

(குப்பிழான்)

கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.நகரிலிருந்து கிளிநொச்சி நகர் வரை மிதிவண்டிப் பயணம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

"வேலையிலிருந்து வீடு நோக்கி..." எனும் பிரதான தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள குறித்த மிதிவண்டிப் பயணம் கொரோனா பரவலைத் தடுத்தல், போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், வீதி விபத்துக்களைத் தடுத்தல், சூழல் மாசடைதலைத் தடுத்தல், உடல் ஆரோக்கியத்தைப் பேணல் ஆகிய விடயங்களை முன்னிறுத்தி இடம்பெறுகிறது.

சமூக விழிப் புணர்ச்சிக்கான பயணமாக முன்னெடுக்கப்படும் குறித்த மிதிவண்டிப் பயணத்தில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், சமூக ஆர்வலர்கள் இணைந்து கொள்ளவுள்ளனர்.

சமூக விழிப்புணர்ச்சிக்கான பயணமாக முன்னெடுக்கப்படும் மேற்படி மிதிவண்டிப் பயணத்தில் ஆர்வலர்கள் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (5-4-18)

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் விக்னேஷ்வரா வித்தியாசாலையின் பழைய மாணவரான் கலாநிதி பா.தனபாலன் பேராசிரியர் பட்டம் பெற்றமைக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார். நிகழ்வில் பேராசிரியர் பா.தனபாலன் எழுதிய தன்னம்பிக்கையுடன் கற்றலும் ஆய்வும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

32 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

(கரணவாய்)

மாதகல் பகுதியூடாக கஞ்சா கடத்தப்படுவதாக சங்கானை மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று வியாழக்கிழமை யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் விக்கிரமசிங்கவின் வழிநடத்தலில் மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சிமன்ன தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 32 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-60)

மத்தியஸ்த சபை செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(குருமன்காடு)

கொவிட் -19 தாக்கம் மீள ஏற்பட்டுள்ளதையடுத்து பாதுகாப்பு கருதி வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபை அமர்வுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் புளியங்குளம் இராமனூர் பாடசாலை, குடியிருப்பு இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, செட்டிகுளம் பிரதேச செயலகம் என்பவற்றில் இடம் பெற்று வந்தன.

இந்நிலையில் கொவிட்- 19 தாக்கம் மீள அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பு கருதி வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.(5-4-250)

பிற்போடப்பட்டது

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் சங்கக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாட்டில் நிலவும் அசாதாரணநிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச சேவை நம்பிக்கை நிதிய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-254)

செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக வடமாகாண STEPS நிறுவனத்தால் ஒக்டோபர் 12 இல் இருந்து நவம்பர் 9 வரை ஏற்பாடு செய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. செயலமர்வுகளுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என வடமாகாண STEPS நிறுவன இணைப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

கற்கைநெறி நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழிக் கற்கை, நிலையத்தினால் ஆரம்ப வகுதி உத்தியோகத்தர்களிற்கு யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடத்தப்படும் 50 மணித்தியாலப் பயிற்சி நெறி வகுப்புக்கள் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் 11 ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என மும்மொழிக் கற்கை நிலையப் பதில் பணிப்பாளர் பி.என். சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

வழிமாறிச் செல்லும் யாழ்ப்பாணம்

ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர்

(குப்பிழான்)

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் என்றாலே இலங்கையில் வேறு எந்த இடங்களிலும் இல்லாத மரியாதை நிலவியது. யாழில் எங்கு பார்த்தாலும் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் கணக்காளர்களாகவும் இருந்த காலம் மலையேறிவிட்டது.

தற்போது எங்களுடைய கலாசாரம் வேறொரு வழியில் செல்கிறது என வடமாகாண ஓய்வுநிலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தம்பிஐயா கணேசநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒழுக்கமான அறிவுரைகள் சொல்லிக் கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டும்.

தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பதனைக் குறிப்பிட்ட நேரமாவது விடுத்துப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் உயர்வுக்கு வழிவிட வேண்டும்.

வயது முதிர்ந்தவர்கள் தங்களுக்கு வயது போய் விட்டதே எனக் கவலைப்படத் தேவையில்லை. வயது என்பது எண்ணுக் கணக்கு மட்டும் தான். நீங்கள் எப்போதும் நீங்கள் தான்.

நாங்கள் வாழும் காலத்தில் எம்மால் இயன்ற நற்காரியங்களைச் செய்வதே மேலானது எனவும் அவர் தெரிவித்தார். (5-4-18)

தனிமைப்படுத்தப்பட்ட 97 பேரில் 57 பேருக்கு தொற்று இல்லை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திலே கொரோனா நோய் பரவுவதைத் தடுக்கும் முகமாக முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மற்றும் வர்த்தக சங்கத்தினர், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா தொற்று காரணமாக 97 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அவர்கள் மினுவாங்கொடையில் இருக்கின்ற ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து திரும்பிய தொற்றுக்குள்ளான புங்குடுதீவு பெண்ணுடனும் மற்றும் ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற ரீதியிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டு உள்ளவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 57 பேர்களுக்கான பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன். அவர்களில் ஒருவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மீதி 40 பேருக்குகான பி.சி.ஆர்.பரிசோதனை கிடைக்கப் பெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கிளிநொச்சி மாவட்ட மக்கள் கொரோனா தொற்றில் இருந்து தம்மை பாதுகாப்புதற்காக சுகாதார திணைக்களங்களினால் மற்றும் அதிகாரிகளினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளை கேட்டு நடந்து கொள்ள வேண்டும்எனவும் கேட்டுக்கொண்டார்.(5-4-316-350)

பிறப்புச்சான்றிதழ் இன்றி 105 சிறுவர்கள் பதிவாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பிரிவில் 105 சிறுவர்களுக்கு பிறப்பு சான்றிதழ் இல்லாத நிலை காணப்படுவதாகவும், அதனை துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செட்டிகுளம் பிரதேச செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, குடும்ப பிரிவு, தந்தை இல்லாமை, தாய் இல்லாமை, மற்றும் திருமணப் பதிவு இல்லாமை போன்ற காரணங்களினாலும், பெற்றோர், பாதுகாவலரின் அக்கறையின்மையாலும் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 105 சிறுவர்கள் பிறப்பு சான்றிதழ் இன்றி இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர்கள் அல்லது அவர்களின் பாதுகாவலர்கள் பிரதேச செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரை தொடர்பு கொண்டால் அதனை துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது 65 பேர் இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக தெரியப்படுத்தியுள்ள நிலையில் 15 பேர் பிறப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுள்ளனர்.

பிரதேச செயலகம் மற்றும் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பிரிவுடன் இணைந்து ஏனைய வர்களுக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (5-4-250)

18 நிலையங்களில் ரயில்கள் நிறுத்தப்பட மாட்டாது

(கொழும்பு)

பிரதான ரயில் பாதையில் ராகம, படுவத்த தொடக்கம் யத்தல்கொட வரையில் 18 ரயில் நிலையங்களில் நேற்று முன்தினம் முதல் ரயில்கள் நிறுத்தப்பட மாட்டாது என்று, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புத்தளம் ரயில் பாதையில் பேரலந்த தொடக்கம் குரண வரையில் நேற்று நள்ளிரவு முதல் குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள ரயில் நிலையங்களில் ரயிலை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதிக்குள், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்ததாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் மீளாய்வுப் பத்திரங்களை கையளிப்பதற்காக பொதுமக்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு வருகை தருவதை தவிர்க்குமாறு தேர்தல்கள்ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் மீளாய்வு பத்திரங்களை பூர்த்தி செய்வதற்காக பொதுமக்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு வருகை தருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்னாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.

எனவே பொதுமக்கள் அதனை தவிர்த்து செயற்படுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை பூர்த்தி செய்யப்பட்ட தேர்தல் மீளாய்வு பத்திரங்களை கிராம உத்தியோகத்தர்கள் வீடுகளுக்கு சென்று அதனைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஜ-4)

கம்பஹாவிற்கு மேலதிக சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

கம்பஹா பிரதேசத்தில் கொரோனாத் தொற்றை தடுப்பதற்காக நேற்று முதல் மேலதிகமாக 40 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடமையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கை சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து கொரோனாத் தொற்று ஏனைய மாவட்டங்களுக்கு பரவுவதை தடுப்பதே இதன் நோக்கமென்று குறித்த சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய மேலும் தெரிவித்தார். (ஜ-4)

திரையரங்குகளை மூடத்தீர்மானம்

(கொழும்பு)

திரையரங்குகள், இரவு விடுதிகள், உணவகங்கள் மற்றும் கூதாட்ட நிலையங்களை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதான தொற்று நோயியல் நிபுணர், விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

குறைகேள் அரங்கு...

அரச பேருந்துகள் போல் தனியார் பேருந்துகளும் பயணிகளுக்கு ரிக்கெட் வழங்க வேண்டும்

கொவிட்-19 நோய் சமூகத் தொற்றாக பரவுவதற்கு பேருந்து பிரயாணம் பிரதான காரணமாகும். பிரயாணம் செய்தோர், அவர்களாகவே முன்வந்து, சுகாதாரப் பிரிவினருக்கு அவர்களது பிரயாண விபரங்களைத் தெரிவிப்பதில்லை. அவர்களால், அவற்றை நினைவில் வைத்திருந்து தெரிவிக்க முடிவதில்லை என்பதே உண்மை. ஆனால், சுகாதாரப் பிரிவினரால் கோரப்படும் விபரங்கள் நோய் பரம்பலை தடுப்பதற்கு அத்தியாவசியமானதாகும்.

தனியார் பேருந்துகளில் சிட்டை (ரிக்கெட்) வழங்கப்படுவதில்லை. இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில் ரிக்கெட் வழங்கப்படுகின்றன. அந்த ரிக்கெட்டுகளில் முதலாவது வரியில் டிப்போவின் பெயர் அச்சிடப்பட்டிருக்கும். இரண்டாம் வரியில் பேருந்தின் இலக்கம்,பேருந்தின் வகை என்பனவும் மூன்றாம் வரியில் தொடர்பு இலக்கமும் நாலாவது வரியில் பிரயாணத் திகதி, பிரயாண நேரம் என்பனவும் ஐந்தாவது வரியில் வழித்தட இலக்கம், பேருந்து எந்த இடத்திலிருந்து புறப்பட்டு எந்த இடத்துக்கு சென்றது என்ற விபரமும் ஆறாவது வரியில் பிரயாணி எந்த இடத்திலிருந்து புறப்பட்டு எந்த இடத்துக்கு சென்றார் என்ற விபரமும் அதன்கீழே பிரயாணக் கட்டணமும் அச்சிடப்பட்டிருக்கும்.

இவ்வளவு விபரங்களை உள்ளடக்கிய சிறிய பிரயாணச் சீட்டை சேர்த்து வைத்திருந்தாலும் நீண்டகாலத்துக்கு அந்தப் பிரயாணச் சீட்டிலிருக்கும் விபரங்களை வாசித்து சுகாதாரப் பகுதியினர் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது. காரணம் - பிரயாணச் சீட்டில் விபரங்கள் அச்சிட்டிருக்கும் மை ஓரிரு நாட்களில் அழிந்து விடும் தன்மை கொண்டது. ஆதலால் பேருந்துகளில் பிரயாணம் செய்தவர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரயாணச் சீட்டிலிருக்கும் முக்கிய விபரங்களை தினமும் ஒரு கொப்பியில் எழுதி வைத்திருந்தால் சுகாதாரப் பகுதியினர் கேட்டால் அவற்றை வழங்க இலகுவானதாக இருக்கும்.

இதனை செயற்படுத்துவதற்கு இலங்கை போக்குவரத்து சபையினால் வழங்கப்படுவதுபோல தனியார் பேருந்துகளிலும் பிரயாணிகள் அனைவருக்கும் சகல விபரங்களையும் உள்ளடக்கிய ரிக்கெட்கள் கொடுக்கப்பட வேண்டும். இதனை சட்டமாக்குவதுடன், அதனை அமுல்படுத்தவும் வேண்டும். இப்படி செய்வதனால் கொரோனா வைரஸை பாரிய சமூகத் தொற்றாக மாறாமல் தடுக்க முடியும்.

நலவாழ்வு ஆலோசகர்
ச.ஆ.கோபாலமூர்த்தி.

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: முதுகல்விமாணி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண், இவரின் மனைவி இறந்துவிட்டார், கணவனை இழந்தவர்களும் ஏற்கப்படும் சைவ போசனம் மட்டும்
தொ.இ: B/11284

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11285

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் க.பொ.தசா/த கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11286

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 28 சூரி,செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் Mechanical Engineering, கனடாவில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11287

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 48 ¾ செவ் 7 இல்
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி, சமூர்த்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/622

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 25 ¼ செவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி, நிரந்தர விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: உயர் தனியார், அரச உத்தியோகம் உள்ள மணமகன்
தொ.இ: G/631

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 16 ¼ செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/660

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 17 ¼ செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி, விஞ்ஞான ஆசிரியை
எதிர்பார்ப்பு:. உத்தியோகம் உள்ள மணமகன்
தொ.இ: G/735

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

தனிமைப்படுத்திய 8 ஆயிரம் பேரில் ஒரு தொகுதியினர் வடக்கில்

(குருமன்காடு)

மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருந்த நிலையில் அவர்களில் ஒரு தொகுதியினர் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா ஊடாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு பேருந்தில் அழைத்து வரப்பட்டுள்ளனர். குறித்த கொரோனாத் தொற்று சந்தேகநபர்கள் 12 பேருந்துகளில் இராணுவ பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர்.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-250)

கடத்தல் முறியடிப்பு மரக்குற்றிகளுடன் வாகனம் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் 6 முதிரை மரக்குற்றிகளுடன் பட்டாரக வாகனத்தினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

பாலமோட்டை காட்டுப்பகுதியில் சில நபர்களின் நடமாட்டம் காணப்படுவதாக ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந்தலைமையிலான பொலிஸார் பாலமோட்டை - ஓமந்தை வீதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது கோவிற்குஞ் சுக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முதிரைக் குற்றிகளை ஏற்றி வந்த பட்டாரக வாகனத்தினை பொலிஸார் மறித்தனர்.

இதன்போது பட்டா ரக வாகனத்தில் பயணித்த வர்கள் வாகனத்தினை அவ்விடத்திலேயே விட்டுத் தப்பித்துயோடியுள்ளனர்.

முதிரைக்குற் றிகளுடன் காணப்பட்ட வாகனத்தினை பொலி ஸார் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்த துடன் வாகனத்தின் உரிமையாளரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தை பொலிஸார் 6 முதிரைக்குற்றிகளையும் பட்டாரக வாகனத்தினையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

பொலிஸாரால் மூடப்பட்டது வாகன விற்பனை நிலையம்

(குருமன்காடு)

வவுனியா மன்னார் வீதியில் கலைமகள் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த வாகன விற்பனைச் சந்தையை வவுனியா பொலிஸாரின் உத்தரவிற்கமைய மூடப்பட்டது.

கொவிட்-19 தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் இம் மாதம் 31 ஆம் திகதி வரை நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் போன்ற பல வேறு நிகழ்வுகளுக்கு அரசாங்கத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று வவுனியா, மன்னார் வீதியில் கலைமகள் மைதானத்தில் தனியார் நிதி நிறுவனத்தினால் வாகன விற்பனை சந்தையொன்று திறக்கப்பட்டிருந்தது .

அரசாங்கத்தின் தடையுத்தரவினை மீறித்திறக்கப்பட்ட வாகன விற்பனையகம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர்மானவடு பொலிஸாருக்கு வழங்கிய உத்தரவின் பேரில் பொலிஸார் வாகன விற்பனையகத்தினை உடனடியாக மூடுமாறு உத்தரவு பிறப்பித்தனர். அதனையடுத்து வாகன விற்பனையகம் மூடப்பட்டது.

(5-4-250)

ஆயுதம் தேடி அகழ்வு தோல்வியில் முடிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் ஆயுதங்கள் இருப்பதாக தெரியவந்ததையடுத்து தனிநபர் ஒருவருடைய காணியில் நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி பெறப்பட்டு விசேட அதிரடிப்படையினர்,பொலிஸார்,இராணுவத்தினர்,புலனாய்வாளர்கள் இணைந்து இந்த அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் குறித்த பகுதியில் எந்தவிதமான பொருட்களும் கிடைக்காத நிலையில் குறித்த அகழ்வுப்பணி தோல்வியில் முடிவடைந்தது.

முல்லைத்தீவில் யுத்தம் நிறைவடைந்து 11 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை குறித்த நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இருப்பினும் அகழப்படும் இடங்களில் எதுவுமே கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-281)

மன்னாரில் கடும் மழை இயல்பு நிலை பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணி முதல் கடும் மழை பெய்தது. இதனால் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் சற்று பாதிப்படைந்தன.

இதேவேளை வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (5-4-285)

மன்னார் கடற்படையினரால் 396 கிலோ மஞ்சள் மீட்பு

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கடற்பிராந்தியத்தில் நேற்று அதிகாலை 396 கிலோ மஞ்சள் கடற்படையினால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று அதிகாலை மன்னார் தாழ்வுபாடு கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் கூட்டுரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் பொதி ஒன்றிலிருந்து 396 கிலோ மஞ்சள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் சுங்கத்திணைக்களத்திடம் கடற்படையினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது .

எனினும் இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார சேவைகள் சாரதிகள்

(நெளுக்குளம்)

வடமாகாண சுகாதார சேவைக்குள் கடமையாற்றிவரும் சாரதிகளை சுகாதாரத் துறைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களிற்கு இடமாற்றம் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதார சேவைகள் சாரதிகள் எட்டு மாகாணத்திலும் இல்லாத நடைமுறை வடமாகாணத்தில் மட்டும் ஏன்?, வடமாகாண சுகாதார சேவைகளின் சாரதியை இடமாற்றுவதை உடன் நிறுத்து, யுத்த காலத்தில் தேவைப்பட்ட நாம் இப்போது விலக்கப்படுவது ஏன்?, போன்றவாறான பதாகைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தமது கோரிக்கையை முன்னிறுத்தி வடமாகாணம் தழுவிய சுகயீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கொவிட்-19 பரவல் காரணமாக மக்களினதும், நோயாளிகளினதும் நலன்கருதி அம்புலன்ஸ் வாகன சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் குறித்த சுகயீன விடுப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர். (5-4-299)



வவுனியாவில் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் பகுதிகளில்நேற்றுக்காலை படையினர் கிருமித் தொற்று நீக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(படம்:-சதீஸ்)

இராசிபலன்

09.10.2020
புரட்டாதி 23, வெள்ளிக்கிழமை
சப்தமி பிற்பகல் 1.22 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 8.59 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சந்திராஷ்டமம் கேட்டை, மூலம் வளவன்

மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

ரிஷபம்

வீட்டு உபயோக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆனந்தமான நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

மிதுனம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத கவலைகளை வளர்த்துக் கொள்வீர்கள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம்.

கடகம்

பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனை பிரார்த்திப்பீர்கள்.

சிம்மம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

துலாம்

தடைகளை தகர்த்து தன்னிறைவு காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

விருச்சிகம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

தனுசு

ஆனந்தமான நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், உறவினர்களின் வருகையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், உறவினர்களின் பகை மறைய எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

கும்பம்

அனுபவம் மிக்கவர்களின் அலோசனைகளைக் கேட்பீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

மீனம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, பேச்சுக்களில் கனிவு பிறக்கும், மனதில் இனம்புரியாத சந்தேகம் குடிகொள்ளும்.

உனது முடிவை யாராவது கேட்டால் மட்டும் சொல்

கொரோனா தீவிரம்

எதிர்வரும் 7 நாட்கள் தீர்மானமிக்கது

இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தீவிர மடைந்துள்ள நிலையில் எதிர் வரும் 7 நாட்கள் தீர்மான மிக்கது என இராணுவத் தள பதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிக ளிலும் கொரோனாத் தொற்றா ளர்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளனர்.

பல மாவட்டங்களுக்கு கொரோனா வைரஸ் பரவி யுள்ளது. ஆகையால், எதிர் வரும் 7 நாட்கள் தீர்மான மிக்கது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)

இருவருக்கு கொரோனா

கர்ப்பிணிப் பெண்ணுக்கு...

(கொழும்பு)

கொழும்பு, காசல் வீதி மகளிர் மகப்பேற்று வைத்தியசாலையில் கர்ப்பிணிப் பெண் ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது. குறித்த பெண், சுவாசக் கோளாறு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மினுவாங்கொடை கொரோ னாத் தொற்று பரவலுக்கும் இந்தப் பெண் ணுக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளதா? என்பது குறித்து விசாரணைகள் நடந்து வருவ தாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட் டுள்ளது. (ஜ-4)

கம்பஹா பெண்ணின் தாய்க்கு...

(மினுவாங்கொடை)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை யில் அடையாளம் காணப்பட்ட, முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளரான பெண் ணின் தாய்க்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சந்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொல்பித்திகம - ராவாஎல பகுதியைச் சேர்ந்த, 58 வயதுடைய பெண்ணே இவ்வாறு தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் குறித்த பெண்ணின் 16 வயதான மகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

புத்தளத்தில் சில பகுதிகள் முடக்கம்

(புத்தளம்)

புத்தளம் - ஆடிகம - பூன விட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞனுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட் டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆனமடுவ ஆடிகம கிராமம் உட்பட பல பகுதிகளுக்கு நேற்று முதல் உள் நுழைதல் மற்றும் வெளி யேறத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

குறித்த இளைஞன் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தொழில் புரிந்து வந்த நிலையில் விடுமுறைக் காக கிராமத்திற்குத் திரும்பி யிருக்கின்றார்.

திடீர் நோய்வாய்ப்பட்டதை அடுத்து பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்டபோது கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், புத்தளம் மாவட்டத்தின் பல்லமா, முண் டலமா மற்றும் ஆராச்சிக்கட்டு பகுதிகளைச் சேர்ந்த 14 குடும் பங்களை சுய தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்துமாறு அப் பகுதி சுகாதார வைத்திய அதி காரி தெரிவித்துள்ளார். (ஜ-4)

கொரோனாத்தொற்றாளர்கள் 506 பேர் தலைமறைவு

(கொழும்பு)

திவுலப்பிட்டிய ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 1034 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 528 பேர் மாத்திரம் நேற்று முன் தினம் மாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாகவும் அத்துடன் திவுலப் பிடியவில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 506 பேர் தலைமறைவாகியுள் ளனர் எனவும் தகவல் வெளியாகி யுள்ளது. கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தகவல் வெளியாகியுள்ளது. (ஜ-4)

பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

(நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

05



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இத்தேர்தலில் அவ்வாறு பெறப் பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 394,136 ஆகும். இவ்வெண்ணி யாட்களின் அனுபவமும் சிலருக்கு கூடவும் சிலருக்கு குறைவாகவும் இருக்கும். இவையெல்லாம் ஒரு



க்கை பொதுவாக தபால்மூல வாக் களிப்பு உட்பட வாக்கெடுப்பு நிலை யங்களில் (யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 615 வாக்களிப்பு நிலையங்களில்) அளிக்கப்பட்ட வாக்குகளின் எண் ணிக்கைக்குச் சமனாகும்.

கேள்வி 13 :- இறுதித் தேர்தல் முடிவுகள் வெளியிடுவதில் ஒவ் வொரு வாக்குப்பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டுகளின் தொகையை எண்ணி வாக்குச்சீட்டு கணக்குடன் ஒப்புநோக்கல் (முதலாம்) கட்டம் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது?

பதில் :- வாக்குகள் எண்ணும் பணி நாளாந்தம் செய்யப்படும் பணி அல்ல. இது தேர்தல்கள் காலத்தில் மட் டும் நடைபெறும் பணி. சில தலைமை வாக்கெண்ணும் அலுவலர்கள் பல தேர்தல்களில் அக் கடமையினைச் செய்திருப்பார்கள். அவர்களுக்கு சிறந்த அனுபவம் இருக்கும். அவர் கள் ஒவ்வொரு செயற்பாட்டையும் மிக விரைவாகச் செய்வார்கள். சில தலைமை வாக்கெண்ணும் அலுவல ர்களுக்கு இத்தேர்தல்தான் முதலா வது அனுபவமாக இருக்கும்.

அவர்களின் செயற்றிறன் குறை வாக இருக்கும். தலைமை வாக்கெ ண்ணும் அலுவலர்கள் வேலைப் பகிர்வினை சரியாகச் செய்யாதவி டத்து வினைத்திறன் குறைவாக இருக்கும். இதுபோலவே பணி வாக்கெண்ணும் நிலையத்தில் பெரிய தாக்கத்தைச் செலுத்தும்.

ஒவ்வொரு வாக்குப்பெட்டியி லுமுள்ள வாக்குச்சீட்டுகளின் தொகையை எண்ணி வாக்குச் சீட்டு கணக்குடன் ஒப்புநோக்க லின் போது கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகள் எண்ணப் படுவதில்லை.

இதற்கு உதாரணமாக பின்வ ரும் செயற்பாட்டை குறிப்பிடலாம். ஒரு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட வாக்குச்சீட்டு கணக்கில் கூறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 927 என எடுப்போம். அவ் வாக்கெ டுப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட வாக்குப்பெட்டியில் உள்ள வாக்கு களை எண்ணும் போது பெறப்பட்ட முடிவு 926 என எடுப்போம்.

இவ்விரு கணக்குகளும் இணங் கிப்போகவில்லை. எனவே அவ் வாக் குகள் மீள எண்ணப்படும். அப்போது பெறப்பட்ட முடிவு 927 ஆயின் கண க்குகள் இணங்கிப் போகின்றன. இப் போது முன்னர் கூறியது போல அவ்வாக் குகள் பெரிய பெட்டிக்கு மாற்றப்படும்.

முதல் முறையிலேயே இவ்விரு கணக்குகளும் இணங்கிப் போயிரு ந்தால் மீள எண்ணப்பட்ட நேரத்தில் இன்னுமொரு வாக்குப் பெட்டியி லுள்ள வாக்குச் சீட்டுகளை எண் ணி யிருக்கலாம். சில நேரங்களில் மீள் எண்ணுகை மூன்று அல்லது நான்கு முறையும் நடைபெறுகின்றன.

தேர்தல் முடிந்த பின் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி, கலதாரி ஹோட்டலில் "பாராளுமன்றத் தேர் தல் 2020இல் கற்றறிந்த பாடங்கள்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடந்தது. அதில் சகல மாவட்ட அரச அதிபர்களும் (மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள்) கல ந்து கொண்டிருந்தார்கள். அதில் கல ந்துகொள்ள எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அதில் தனது அனு பவத்தைப் பகிர்ந்து கொண்ட காலி மாவட்ட அரச அதிபர் (தேர்தல் தெரி வத்தாட்சி அலுவலர்) பின்வருமாறு கூறினார். "2020 தேர்தலில் முத லாவது முடிவை வெளியிட்ட மாவட் டம் காலி மாவட்டம் ஆகும்.

ஆனால் எனது மாவட்டத்தில் இரண்டு வாக்கெண்ணும் நிலைய ங்களில் வாக்குப்பெட்டியிலிருந்த வாக்குச்சீட்டுகளின் தொகை அவ் வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து பெறப்பட்ட வாக்குச்சீட்டு கணக்குகளு டன் இணங்காத காரணத்தால் வாக் குப்பெட்டியிலிருந்த வாக்குச்சீட்டுகள் நான்கு முறை மீண்டும் மீண்டும் எண்ணவேண்டி ஏற்பட்டதென்றும் இத் தவறு வாக்கெண்ணும் நிலை யத்தில் ஏற்படவில்லையென்றும் அத்த வறு வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பட்டதென்றும் அதாவது வாக்கெ டுப்பு நிலையத்தில் தலைமை வகித்த சிரேஷ்ட தலைமைதாங்கும் அதிகாரி விட்ட தவறு" என்றும் கூறினார்.

இதிலிருந்து நீங்கள் விளங்கக் கூடியது வாக்கெண்ணும் நிலையங் களில் ஏற்படும் தாமதத்திற்கு வாக் கெடுப்பு நிலையத்தின் தவறுகளும் காரணமாகலாம்.

அக்கருத்தரங்கில் தனது அனுப வத்தை பகிர்ந்து கொண்ட யாழ்ப் பாண மாவட்ட அரச அதிபர் (தேர் தல் தெரிவத்தாட்சி அலுவலர்) பின் வருமாறு கூறினார். "எனது தேர்தல் மாவட்டத்திற்கு இம் முறை தேர்தற் கடமைகளுக்கு வெளிமாவட்டங்களி லிருந்து அதிகாரிகளை வரவழைக்க வில்லை. காரணம் யாழ்.மாவட்ட த்தில் போதுமான அளவு அரச அதி காரிகள் இருக்கிறார்கள் என்பதால். ஆனால் அவர்களுக்கு தேர்தல் சம் பந்தமான அறிவு போதுமானதாக இல்லாத காரணத்தால் வாக்கெண் ணும் பணியை விரைவாகச் செய்து முடிக்க முடியவில்லை.

இத்தாமதம் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதத்தை ஏற்படுத்தியது. தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் மக்கள் மத்தியில் சில வதந்திகளைப் பரப்பி அது சில சம்பவங்கள் நடை பெறக்காரணமாயிற்று.

எனவே இனிவரும் தேர்தல்க ளில் யாழ்.மாவட்டத்திற்கு வெளிமாவ ட்டங்களிலிருந்து தேர்தல் கடமைக ளில் அனுபவம் வாய்ந்த தமிழ் அதி காரிகளை நியமிக்க ஆவன செய்ய வும்" என்று கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு முதலாம் கட்ட வாக்கு எண்ணிக்கையில் கால தாமதம் ஏற்படலாம். அதாவது ஒரு வாக்கெண் ணும் நிலையத்தில் 2-3 மணித்தி யாலங்களில் முடிக்கப்படும் வேலை இன்னுமொரு வாக்கெண்ணும் நிலையத்தில் 6-7 மணித்தியா லங்கள் எடுக்கலாம். இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவது ஒரு தேர்தலில் சகஜமானதொன்று.

தேர்தல் முடிவுகள் வெளி யிடுவதில் ஏற்படும் தாமதத் திற்கான காரணம் பற்றி 13 ஆம் கேள்வி பதிலில் ஆராய ப்பட்டுள்ளது.

வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டம்.

முதலாம் கட்டம் முடிவடைந்த தன்.பின்னர் தேவைப்பட்டால் சிறிது நேரம் ஓய்வெடுத்ததன் பின்னர் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்ப டும். இரண்டாம் கட்டம் என்னவெ ன்றால் ஒவ்வொரு கட்சியினாலும் / சுயேட்சைக் குழுவினாலும் பெற ப்பட்டுள்ள வாக்குத்தொகையை வெவ்வேறாக எண்ணல் ஆகும். இரண்டாம் கட்டம் இரண்டு உப கட்டங்களாக மேற்கொள்ளப்படும். அவை 1 ஆம் உப கட்டம் மற்றும் 2 ஆம் உப கட்டம் என்பனவாகும்.

வாக்கெண்ணலின் இரண் டாம் கட்டம் என்னவென்றால் ஒவ்வொரு கட்சியினாலும் / சுயேட்சைக் குழுவினாலும் பெறப்பட்டுள்ள வாக்குத் தொகையை வெவ்வேறாக எண்ணல் ஆகும். இரண்டாம் கட்டம் இரண்டு உப கட்டங்க ளாக மேற்கொள்ளப்படும்.

(தொடரும்)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலைப் பெண் முதலாவது தொற்றாளர் அல்ல - விசேட வைத்திய நிபுணர்

(கொழும்பு)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் கொவிட்-19 தொற்று ஏற்பட்ட நிலையில் இனங்காணப்பட்ட பெண் முதலாவது தொற்றாளர் அல்ல. முதல் தொற்றாளர் யார், எவ்வாறு தொழிற்சாலையிலுள்ளவர்களுக்கு தொற்று ஏற்பட்டது என்பதை இனங்காண்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக ளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது இனங்காணப்படும் நோயாளர்களில் வைரஸின் செயற்பாடுகள் தீவிரமாகக் காணப்படுகின்றமையால் தொற்று பரவக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இந்த கொத்தணி பரவலால் கொழும்பு மாவட்டத்திற்கு நேரடி தொடர்பு இல்லை என்ற போதிலும் ஆடை தொழிற்சாலையுடன் நேரடி தொடர்புகளைப் பேணிய அலுவலகம் கொள்ளுப்பிட்டியில் உள்ளதால் தீவிர கண்ணகாணிப்பில் உள்ளது.

கேள்வி: இந்தியாவிலிருந்து குறித்த ஆடை தொழிற்சாலைக்கு வந்த இருவரால் தான் தொற்று ஏற்பட்டது என்று கூறப்படுகிறதே?

பதில்: எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் முதலாவதாக இனங்காணப்பட்ட பெண் முதலாவது தொற்றாளர் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. காரணம் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து குறித்த ஆடை தொழிற்சாலையில் பெரும்பாலனவர்களுக்கு தொற்று அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

இந்த பெண்ணுக்கு செப்டெம்பர் 28 ஆம் திகதியே சுகயீனம் ஏற்பட்டுள்ளது. எனவே இவர் முதலாவது தொற்றாளர் அல்ல. இவருக்கு முன்னர் தொற்று ஏற்பட்டவர்கள் அங்கு இருந்துள்ளார்கள். 800 பேரில் முதலாவது தொற்றாளர் யார் என்று இனங்காண்பது கடினமாகும். இந்நிலையில் முதலாவது தொற்றாளரையும் தொழிற்சாலையிலுள்ளவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதை இனங்காண்பதிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மினுவாங்கொடை - ஆடை தொழிற்சாலையில் தொழில் புரிபவர்கள் சிலர் விடுமுறையில் சென்றுள்ளனர். அவர்களில் அம்பாந்தோட்டை, பதுளை, காலி, குருநாகல், மொனராகலை, புத்தளம், கேகாலை, களுத்துறை, கண்டி, மாத்தறை, பொலநறுவை, இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ளோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து மக்கள் வீண் அச்சமடையத்தேவையில்லை. ஆரம்பத்தைப் போன்று அடிப்படை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றினால் ஆபத்துக்களை குறைத்துக் கொள்ள முடியும்.

வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் முதலாவதாக இனங்காணப்பட்ட பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆரம்ப கட்டத்திலேயே பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமையால் அவர்களிடம் வைரஸ் தன்மை வெளிப்படாமல் இருக்கலாம். அதனாலேயே அவர்களது பரிசோதனை முடிவில் தொற்று ஏற்படவில்லை என்ற முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும் தொடர்ந்தும் அவர்களை தனிமைப்படுத்தி 10 நாட்களுக்குள் மீண்டும் .பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்படும். அடுத்த பரிசோதனை முடிவில் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் முடிவு கிடைக்கப் பெறலாம், மாறாக ஏற்பட வில்லை என்ற முடிவும் கிடைக்கப் பெறலாம்.

முடிவுகள் எவ்வாறிருப்பினும் அதுவரையில் அவர்கள் தனிமைப்படுத்தப்படுவர் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

நிதிமோசடி விசாரணைப் பிரிவிற்கு 141 இலட்சத்தை செலவிட்ட நல்லாட்சி

பிரதமர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நிதி மோசடி விசாரணை பிரிவின் (எஃப்.சி.ஐ.டி) அதிகாரிகள் 2015 முதல் 2019 வரையான விசாரணை நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதுடன், அச்சுற்றுப் பயணங்களில் ஈடுபட்ட அதிகாரிகள் 20 பேருக்கான சுற்றுப்பயணத்திற்கான விமான பயணச்சீட்டு கட்டணம் மற்றும் சுற்றுப்பயணத்திற்கான கொடுப்பனவாக சுமார் 141 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற கேள்வி நேரத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் பதிலளித்து உரையாற்றிய பிரதமர், "ஊழல் மோசடி விசாரணை பிரிவொன்றை ஸ்தாபிக்கும் பேரில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல்களை கண்டறிதல் எனும் தலைப்பில் அப்போதைய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்களுக்கு அமைய 2015 ஜனவரி 21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய ஊழல் தடுப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தலைவராகக் கொண்ட 13 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

2015 ஜனவரி 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஸ்தாபிக்கப்பட்ட ஊழல் தடுப்பு குழுவின் உறுப்பினர்களுக்காக பிரதமர் அலுவலகத்தினால் ஊதியமோ அல்லது கொடுப்பனவோ செலுத்தப்படவில்லை.

அத்துடன், 2015 ஜனவரி 21 அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2015 பெப்ரவரி 6 ஆம் திகதி ஊழல் தடுப்பு குழுவிற்காக செயலாளர் அலுவலகமொன்றை அமைத்தல் மற்றும் பொருத்தமான ஊழியர்களை நியமித்தல் எனும் தலைப்பிலான அமைச்சரவை பத்திரத்திற்கு அமைய 2015 பெப்ரவரி 11 அமைச்சரவை தீர்மானத்தில் குழுச் செயலாளர் அலுவலகமொன்றை அமைப்பதற்கும், தேவையான ஊழியர்களை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கமைய, 44 பேரை கொண்ட ஊழியர்கள் குழாமொன்று நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பிரதமர் அலுவலகத்தினால் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

நிதி மோசடி விசாரணை பிரிவின் (எஃப்.சி.ஐ.டி) அதிகாரிகள் 2015 முதல் 2019 வரையான விசாரணை நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த நிதி மோசடி விசாரணை பிரிவின் அதிகாரிகள் 20 பேரும் அவ்வப்போது 19 வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்களுக்கான விமான பயணச்சீட்டு கட்டணம் மற்றும் சுற்றுப்பயணத்திற்கான கொடுப்பனவாக சுமார் 141 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அவ்வாறு வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவி நிலைகள் வேறு வேறாக அவர்களை அச்செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டமைக்கான நோக்கம், பயணித்த நாடுகள், அந்நாடுகளில் இருந்த காலப்பகுதி, அவ்வாறு பயணம் மேற்கொண்ட குழு உறுப்பினர்களின் விமான பயணம், தங்குமிட வசதி மற்றும் ஏனைய வசதிகளுக்காக செலவிடப்பட்ட தொகை என்பன தொடர்பான முழுமையான விபரங்கள் தனது அறிக்கையில் உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (ஐ-4)

பாரதம்

டில்லியின் காற்றின் தரம் மோசமானது

(டில்லி)

ஜூன் மாதத்துக்கு பிறகு முதல் முறையாக மீண்டும் டில்லியில் நேற்று காற்றின் தரம் மோசமான நிலையை எட்டியது. உலகில் காற்றின் தரம் அடிக்கடி மோசமாகும் நகரங்களில் டில்லி முக்கிய இடத்தை பிடித்துள்ளது. அதிகரித்துள்ள வாகனங்களின் புகை, பஞ்சாப், அரியானா போன்ற அண்டை மாநிலங்களில் வயல்தழி வுகளை எரிப்பதால் கிளம்பும் புகை போன்றவை டில்லியில் காற்று மாசை ஏற்படுத்துகின்றன.

இந்த நிலையில் கொரோனா நோய்த்தொற்றால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு டில்லியில் காற்று மாசை வெகுவாக குறைத்தது. ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்கள் காற்றின் தரம் ஓரளவு நல்ல நிலையில் இருந்தது. அதன்பிறகு பரவாயில்லை என்ற நிலைக்கு வந்தது. ஆனால் ஜூன் மாதத்துக்கு பிறகு முதல் முறையாக மீண்டும் நேற்று காற்றின் தரம் மோசமான நிலையை எட்டி யது. (நி)

மன்னர் காலத்து சுரங்க வழி நீர்ப்பாதை கண்டுபிடிப்பு

(தஞ்சாவூர்)

தஞ்சை மேலவீதி அய்யன்குளத்திற்கு மன்னர்கள் காலத் தில் அமைக்கப்பட்ட சுரங்கவழி நீர்ப்பாதை கண்டுபிடிக்கப்பட்டு ள்ளது. தஞ்சையை ஆண்ட மன்னர்கள், தொலைநோக்கு பார்வையுடன் நீர் மேலாண்மைக்கான அடிப்படை கட்டமைப்பு களை உருவாக்கினார்கள். இன்றைக்கும் இவை செயலாற்றி வருகின்றன. அதில் பல குளங்கள் இன்னும் தஞ்சை மாநக ரின் நிலத்தடி நீருக்கான ஆதாரமாக உள்ளன. இதில் பல குளங்களுக்கு தண்ணீர் செல்வதற்கான சுரங்க வழித் தடங்கள் அமைக்கப்பட்டன.

சோழ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை நகரை சுற்றிலும் நான்கு புறமும் தொடர்ச்சியாக தண்ணீர் பயணிக் கக்கூடிய அகழி அமைக்கப்பட்டது. பரந்து, விரிந்து பல கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட இந்த அகழியில் காவிரி நீரும் மழைநீரும் சேமிக்கப்பட்டன. இது போதாதென, பெரிய கோவில் அருகே சிவகங்கை குளமும் உருவாக்கப்பட்டது.

பின்னர் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்தின்போது மேலவீதி அருகே மிகவும் பிரமாண்டமான அய்யன்குளம் உருவாக்கப்பட்டது. சிவகங்கை குளத்தில் இருந்து அய்யன் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற் கான பாதாள நீர்வழிப்பாதையும் அமைக்கப்பட்டது.

இதில் அய்யன்குளம் மட்டும் 7 ஆயிரத்து 437 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்டது. தற்போது இந்தக் குளத்திற்கு மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட சுரங்கவழி நீர்ப்பா தையை கண்டுபிடிக்கும் முயற்சியில் மாநகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டனர். அதன்படி அய்யன்குளத்தில் இருந்து சிவகங்கை குளத்தை நோக்கிச் செல்லும் சுரங்கவழி நீர்ப்பாதையை கண்டுபிடித்தனர். இந்த நீர்வழிப்பாதை மொத்தம் 950 மீற்றர் நீளம் ஆகும். வீதி மட்டத்தில் இருந்து 7 அடி ஆழத்தில் இந்த நீர்வழிப்பாதை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



கொரோனா

15 கோடி மக்கள் வறு

(வோஷிங்டன்)

கொரோனாவால் அடுத்த ஆண்டிற்குள் உலக மெங்கும் 15 கோடி பேர் கொடிய வறுமையில் தள் ளப்படுவார்கள் என்று உலக வங்கி அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது.



இந்திய விமானப்படையின் 88 ஆவது ஆண்டு தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி காசியாபாத்தில் உள்ள ஹிண்டன் விமானப்படை தளத்தில் விமானப்படை தின அணிவகுப்பு மற்றும் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் 68 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஹைப்பர் சோனிக் ஏவுகணைப் பரிசோதனையானது கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளைக் கடலில் உள்ள அட்மிரல் கோர்ஷ்கோவ் என்ற போர் கப்பலிலிருந்து ஏவப்பட்டுள்ளதாக ரஷ்யா உறுதிப்படுத்தியுள்ளது. ஏவுகணையானது ஒலியை விட எட்டு மடங்கு வேகத்தில் சென்று 280 மைல் தொலைவு இலக்கை தாக்கியுள்ளது. இந்த ஏவுகணை பரிசோதனையை ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாராட்டியுள்ளார்.

வெளிநாடு

வேகம் தணிந்தபாடில்லை

மையின் பிடிக்குள் தள்ளப்படும் நிலை

மீண்டும் மீண்டும் எச்சரிக்கும் உலக வங்கி

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் கோரப்பிடியில் உலகம் சிக்கி தவித்து வருகிறது. 3.58 கோடி பேர் இந்த தொற்று பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். 10½ இலட்சம் பேர் கொரோனாவுக்கு இரையாகியும் உள்ளனர்.

இது மட்டுமின்றி தொடர் ஊரடங்கு, பொதுமுடக்கத்தால் தொழில், வர்த்தகம் முடங்கின. பல கோடி பேர் வேலை இழப்புக்கு ஆளாகி உள்ளனர்.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் பெருந் தொற்றால் அடுத்த ஆண்டிற்குள் உலகமெங்கும் 8.8 கோடி பேர் முதல் 15 கோடி பேர் வரை கொடிய வறுமைக்கு ஆளாவார்கள் என்று உலக வங்கி கூறுகிறது. பொருளாதார பாதிப்பின் எதிரொலிதான் இது.

கொரோனா மட்டும் தாக்காமல் இருந்திருந்தால் நடப்பு ஆண்டில் வறுமை விகிதம் 7.9 சதவீதமாக குறைந்திருக்கும் என்றும் ஏற்கனவே அதிக வறுமை விகிதங்களைக் கொண்ட நாடுகளில்தான் புதிய ஏழைகள் இருப்பார்கள் என்றும், நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் கணிசமான மக்கள் தீவிர வறுமைக்கோட்டுக்கு கீழே செல்வதை காண முடியும் என உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (நி)

உலகமே எதிர்பார்க்கும் அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கு?

(ஓஸ்லோ)

அமைதிக்கான நோபல் பரிசு பெறப்போவது யார் என்று இன்று அறிவிக்கப்படும். உலகம் முழுவதும் அதுபற்றிய எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் சிறப்பாக செயற்படுபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல் துறைகளுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று வெள்ளிக்கிழமை அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்படும்.

தற்போது, கொரோனா பரவல், இராணுவ மோதல்கள், பருவநிலை மாற்றம் என உலகமே சிக்கல்களில் சிக்கித்தவிக்கிறது. இந்த நேரத்தில், அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பு, நம்பிக்கை ஒளிக்கீற்றாக அமையும் என்று உலகம் எதிர்பார்த்து காத்திருக்கிறது.

ஜ.நாவுக்கும், அதன் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸிற்கும் வழங்கலாம் என்று ஸ்டாக்ஹோம் சர்வதேச

அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டேன் ஸ்மித் யோசனை தெரிவித்துள்ளார்.

சீனாவின் உய்குர் பகுதியைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் இலாம் டோடி மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்களுக்கும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

ஒரே நேரத்தில் பதவி விலகிய பிரதமர், சபாநாயகர்

(பிஷ்கெக்)

ஒக்டோபர் 4 ஆம் திகதி வெளியான பாராளுமன்ற தேர்தல் முடிவுகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெகுஜன ஆர்ப்பாட்டங்களையடுத்து கிர்கிஸ்தான் பிரதமரும், சபாநாயகரும் பதவி விலகியுள்ளனர். அதன்படி கிர்கிஸ்தான் பிரதமர் குபாட்பெக் போரோனோவும் பாராளுமன்ற சபாநாயகர் தஸ்தான் ஜுமாபெக்கொவும் தங்கள் இராஜினாமாக் கடிதத்தை தலைநகர் பிஷ்கெக்கில் நடந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் வழங்கினர். இவர்களின் இராஜினாமாவையடுத்து சதிர் ஜாபரோவை இடைக்கால பிரதமராகவும், மிகிபெக் அப்தில்தாயேவை பாராளுமன்ற சபாநாயகராகவும் நியமிக்க சட்டமியற்றுபவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர். கிர்கிஸ்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் முடிவுகளுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

இரசாயனவியலுக்கான நோபல் பரிசு இரு பெண்களுக்கு

(ஸ்டார்ஹோம்)

இரு பெண்களுக்கு 2020 ஆம் ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபால் பரிசு வழங்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் இம்மானுவேல் கார்ப்ரன்டியர் மற்றும் அமெரிக்காவின் ஜெனிஃபர் டௌட்னா ஆகியோருக்கே இவ்வாறு இரசாயனவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

வெற்றியாளர்கள் 10 மில்லியன் ஸ்வீடிஸ் குரோனர் பரிசுத் தொகையைப் பகிர்ந்து கொள்வார்கள்.

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் உள்ள கரோனலின்ஸ்கா இன்ஸ்ட்டியூட்டில் உள்ள நோபல் பரிசுக் குழு இரசாயனவியலுக்கான நோபல் விருதை நேற்று முன்தினம் அறிவித்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனிபர் டோடுனா, ஜேர்மனியைச் சேர்ந்த இமானுல் சார்பென்டர் ஆகிய இருவிஞ்ஞானிகளுக்கு நோபல்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் மேற்கொண்ட மரபணு மாற்றம் குறித்த ஆய்வுக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் இமானுல் சார்பென்டர், ஜெனிபர் டோடுனா ஆகிய இரு விஞ்ஞானிகளும் சேர்ந்து மரபணுத் தொழில்நுட்பத்தில் சிஏஎஸ்9 எனும் மரபணு மாற்றக் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதைப் பயன்படுத்தி விலங்குகள், தாவரங்கள், நுண்ணுயிரிகள் ஆகியவற்றின் டிஎன்ஏக்களை மாற்ற முடியும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் மிகப்பெரிய புரட்சிகரமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். புற்றுநோய்க்குப் புதிய மருத்துவத்தையும், மருந்துகளையும் கண்டுபிடிக்க முடியும், நீண்டகாலமாக தீர்வு இல்லாத நோய்களையும் தீர்க்க உதவும். (நி)

எமது தொழிற்சாலைக்கு எந்த நாட்டினரும் வரவில்லை

தொற்று ஏற்பட்டவர்களுக்கு அறிகுறிகளும் தென்படவில்லை

பிரென்டிக்ஸ் நிறுவனம் அறிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக உறுதி செய்யப்பட்ட தமது ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த பலருக்கு ஆரம்பத்திலேயே தொற்று ஏற்பட்டமைக்கான எவ்வித முன்னறி குறிகளும் தென்படவில்லை என்று பிரென்டிக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரென்டிக்ஸ் நிறுவனத்தின் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையை மையப் படுத்திய கொரோனா பர வலைத் தொடர்ந்து, நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவல் ஆரம்பித்திருக்கிறது.

இந்நிலையில் வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த பலருக்கும் ஆரம்பத்தில் அதற்கான எவ்வித முன்னறி குறிகளும் தென்படவில்லை எனக் குறிப்பிட்டு பிரென்டிக்ஸ் நிறுவனம் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

அத்துடன், இந்தியா அல்லது வேறு நாட்டைச் சேர்ந்த எவரும் தமது தொழிற்சாலைக்கு வருகை தரவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், "எமது தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு கொவிட்-19 வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப் பட்டுள்ள நிலையில் மிகவும் சவாலுக்குரிய விடயம் என்னவென்றால் தொற்று உறுதி செய்யப்பட்ட அநேகமானோருக்கு நோய் அறிகுறிகள் எவையும் தென்படவில்லை என்பதாகும்.

மேலும், இதுவிடயத்தில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் நெருக்கமாகவும் ஒத்துழைப்புடனும் செயலாற்றி வருகின்றனர்.

தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களின் உறவினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும்போது, அதன் விளைவாக நெருக்கடிகளை எதிர்கொள்பவர்களுக்கு அவசியமான உதவிகளை இயலுமானவரையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எமது தொழிற்சாலை ஊழியர்கள், அவர்களது உறவினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களின் தேவைகளை இயலுமான வரையில் பூர்த்தி செய்வதற்கு அவசியமான் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

எமது ஊழியர்களினதும் சமூகத்தினதும் ஒட்டுமொத்த நாட்டினதும் பாதுகாப்பே எமது முதன்மையான அக்கறைக் குரிய விடயமாக இருக்கின்றது.

இதேவேளை தற்போதைய நெருக்கடி நிலையின் மத்தியில் ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் இராணுவம் ஆகிய பிரிவினரால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

இதேவேளை, இந்தியா அல்லது வேறு நாட்டைச் சேர்ந்த எவரும் எமது தொழிற்சாலைக்கு வருகை தரவில்லை.

இந்தியாவின் விசாகபட்டினத்தில் இருந்து இலங்கை பணியாளர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் மூன்று விமானங்களில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஆனால், இவர்கள் அனைவரும் இலங்கை அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கு அமைய தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களில் எவரும் மினுவாங்கொடை தொழிற்சாலைக்குச் செல்லவில்லை" என அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-7)

மதஸ்தலங்களில் ஒன்றுகூடுவதை இயலுமானவரை தவிருங்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதஸ்தலங்களிலும் முன்னெடுக்கப்படும் வழிபாடுகளில் அதிகளவான மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன மற்றும் மதகலாசார அலுவல்கள் அமைச்சினால் குறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் பௌத்த மதஸ்தலங்களில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மதவழிப்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறுமாயின் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன், சுகாதார வழிகாட்டல்களுடன் அவற்றை முன்னெடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய சூழ்நிலையில், பொது மக்களை தமது வீடுகளுக்குள் வழிபாடுகளை முன்னெடுப்பது, கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-7)

குழந்தையை குதறிய நரி

(ஹொரணை)

ஹொரணை - மீமனபலான பகுதியில் நரிக் கடிக்குள்ளான ஒரு வயது பெண் குழந்தை, சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு முற்றத்தில் சகோதரர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையே இவ்வாறு நரியின் கடிக்கு இலக்காகியுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த தாய், ஒரு வயதுக் குழந்தையை நரியிடமிருந்து மீட்டுள்ள நிலையில் நரி குழந்தையின் பாதத்தை கடித்துள்ளது. நரிக் கடிக்குள்ளான குழந்தை சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தையைக் கடித்த நரியினை பிரதேசவாசிகள் இணைந்து அடித்துக் கொலை செய்துள்ளனர். (நி-7)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

நாயின் நல்ல பண்புகள்

உங்களுக்கு கடவுள் பக்தி உண்டா? என்று கேட்டார் ஒருத்தர்; உண்டு என்று சொன்னார் இன்னொருத்தர். அப்படியென்றால் நாயிடம் இருக்கிற நல்ல பண்புகள் எல்லாம் உங்களிடமும் இருக்க வேண்டும் என்றார் அவர்.

இவருக்கு அதிர்ச்சியாகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை. என்னங்க திடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள் என்றார். நான் ஒன்றும் கிண்டலுக்காகச் சொல்லவில்லை. வலிமார்களின் வரலாறு படித்தேன். அதில் ஹஸன் பஸரி (ரஹ்) சொல்கின்றார்...

நாயிடமும் பத்து நல்ல பண்புகள் உண்டு. இறை நம்பிக்கை உள்ளவர்களிடமும் அந்த பத்து நல்ல பண்புகள் இருக்க வேண்டியது அவசியம் என்கிறார்.

சரி அப்படி என்ன பத்து நல்ல பண்புகள் நாயிடம்.

முதல் பண்பு: அது பசித்திருக்கும். பசித்திருத்தல் என்பது நல்லவர்களின் நற்பண்பு.

இரண்டாவது: அது தங்குவதற்கு குறிப்பிட்ட இடம் கிடையாது. இந்தப் பண்பு... இறை ஆதரவைப் பெற்றவர்களின் அடையாளம்.

மூன்றாவது: அது இரவில் கொஞ்ச நேரம்தான் தூங்கும். இது இறை காதல்களில் நற்பண்பு.

நாலாவது: அது இறந்தால் அனந்தரம் கொள்ளும் பொருள் அதனிடம் கிடையாது. இது துறவிகளின் அடையாளம்.

ஐந்தாவது: எஜமான் எத்தனை தடவை அடித்து விரட்டினாலும் அவரை விட்டு விலகாது. உண்மை ஆன்மீக மாணவர்களின் வழக்கம் இது.

ஆறாவது: அது பூமியில் தாழ்ந்த இடத்தையே பொருத்திக் கொள்ளும். தாழ்மையுடையோர் நற்பண்பு இது.

ஏழாவது: நாய் அதன் இடத்தை வேறொன்று ஆக்கிரமித்தால் அது வேறொரு இடத்திலே சென்று படுத்துக்கொள்ளும். இறை நாட்டமுள்ளோர் நற்பண்பு இது.

எட்டாவது: எத்தனை தடவை விரட்டி விட்டாலும் அதன் முன்னால் ஒரு ரொட்டித் துண்டைக் காட்டினால் நட்பால் வருமே ஒழிய விநயத்துடன் வராது. இது பக்திமான்களின் நற்பண்பு.

ஒன்பதாவது: உணவைக் கண்டால் அது தொலைவில் அமர்ந்து வழி பார்த்துக் கொண்டிருக்கும். இது ஏழைகளின் நற்பண்பு.

பத்தாவது: அது ஒரு இடத்தை விட்டு விலகிவிட்டால் மறுபடியும் அந்த இடத்தை திரும்பிப் பார்க்காது.

இது விசாரமுடையவர்களின் குணம். ஆகக்கூடிய நாய்களிடமிருந்து நல்லவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய நற் பண்புகள் இருக்கா? இல்லையா?

ஆனால் நாம் என்ன செய்கிறோம்? அடுத்தவர்களை திட்டுவதற்குத் தான் நாய் என்னும் வார்த்தையை உபயோகிக்கின்றோம். அவனிடம் பேச்சுக் கொடுக்காதே... நாய் மாதிரி வள்ளென்று விழுகிறான்! என்று சொல்வதும் உண்டு!

ஒருவர் விதம் விதமாக நாய்க் குட்டிகளை வளர்த்துக் கொண்டிருந்தார்.

பல்வேறு இனங்கள்.. வெவ்வேறு ஜாதிகள்.. வெளிநாட்டு வகையில் எல்லாம் வளர்த்து விற்பனை செய்து கொண்டிருந்தார். எல்லாவற்றையும் வீட்டினுள்ளே வைத்து வளர்த்துக்கொண்டிருந்தார். அவரிடம் நாய்க்குட்டி விலைக்கு வாங்குவதற்கு சென்றார் ஒருவர்.

சேர்... ஒரு நல்ல ஜாதி நாய்க்குட்டி வேண்டும். அது எஜமானுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். எப்போதும் என்னை விட்டுப் பிரியக் கூடாது.. அப்படிப்பட்ட குணமுள்ள ஒரு குட்டியை நீங்களே பார்த்து தேர்ந்தெடுத்துக் கொடுங்கள்! என்றார்.

அப்படி என்றால் அதோ உங்களுக்கு வலது பக்கம் கட்டிப் போட்டுள்ள அந்தக் கறுப்பு குட்டியைக்கொண்டு போங்கள்! என்றார் அவர்.

இதற்கு எஜமான் விசுவாசம் அதிகமா? என்று கேட்டார்.

ஆமாம். வளர்ப்பவர்களிடம் ரொம்பப் பிரியமாக இருக்கும். பிரியவே பிரியாது! என்றார் அவர்.

அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? என்றார்.

இதுவரைக்கும் இந்த நாய்க்குட்டியை ஏழு பேரிடம் விற்றுள்ளேன்..! அழைத்துப் போன அடுத்த நாளே இங்கே ஓடி வந்திடும்! என்றார் அவர்.

சர்வதேசம் விளையாட இலங்கை மைதானம் அல்ல

வெளிவிவகார செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை சர்வதேச அரசியல் சக்திகளுக்கான விளையாட்டு மைதானமாக விளங்க முடியாது என வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முந்தினம் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொ

ண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடத்தை கருத்தில் கொண்டு சர்வதேச அரசியல் சக்திகள் அதனை விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு அனுமதிக்கமுடியாது. அந்த போட்டியில் ஆகக் குறைந்தது நாங்கள் நடுவராகவாவது இருக்கவேண்டும்.

இந்த விளையாட்டில் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை உள்வாங்கவேண்டிய தேவையுள்ளது. தேசிய நலன்களை அடிப்படையாக கொண்ட கடல்சார் கொள்கையை உருவாக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச அரசியல் சக்திகள் இந்து சமுத்திரத்தை விசேடமாக கருத்தில் கொண்ட தங்கள் சொந்த கடல்சார் கொள்கைகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் கொண்டுள்ளன.

இலங்கை சர்வதேச அரசியல்மற்றும்பொருளாதார மூலோபாய அமைவிடத்தில் உள்ள போதிலும் அதனிடம் அவ்வாறான உறுதியான கொள்கையில்லை.

இலங்கை தனது சொந்த கடல்சார் கொள்கையை உருவாக்க முயல்கின்றது. இலங்கையை ஒரு சாதனமாக பயன்படுத்தி சர்வதேச அரசியல் சக்திகள் தங்களுக்குள் மோதிக் கொள்வதற்கும் இலங்கையை விளையாட்டு மைதானமாக பயன்படுத்துவதற்கும் அனுமதிக்க முடியாது என உறுதிபடத் தெரிவித்தார். (ஜ-4)

பரீட்சார்த்திகளை கண்காணிப்பதற்கு இணையவழி ஊடாக நடவடிக்கை

(கொழும்பு)

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் தரவு மற்றும் அவர்களின் சுய தகவல்களை கண்காணிப்பதற்கு இணைய வழி ஊடாக விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை என்பன அதி கூடிய பாதுகாப்பு மட்டத்தில் நடத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விடயத்தில் பாடசாலை அதிபர்கள் முதல் தரப்பினராக இணைத்து கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திட்டமிடப்பட்ட வகையில் பரீட்சையை நடத்த இறுதி தீர்மானம் எடுத்தமை முதல் வெற்றியாகும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (ஜ-4)

பாதுகாப்பு விடயத்தில் ரணில் அக்கறை காட்டவில்லை

மகேஷ் சேனநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு விடயங்களில் அக்கறை காட்டவில்லை என முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க குற்றம் சாட்டியுள்ளார். தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் முடிவடைவதற்கு முன்னர் அவர் வெளியேறிய போது இது தெளிவாகத் தெரிந்தது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முந்தினம் சாட்சியம் வழங்கிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தனது எல்லைக்குட்பட்ட இராணுவப் புலனாய்வு அமைப்பு, தேசிய தவ்ஹீத் ஜமாஅத் மற்றும் அதன் தலைவர் சஹ்ரான் காஷிம் தொடர்பான விடயங்களை 2018 இல் நடந்த தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் விவாதித்திருந்தது.

எனினும், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் இந்த எச்சரிக்கையை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

2018 ஆம் ஆண்டு திகன பகுதியில் இடம்பெற்ற கலவரத்தின் போது சஹ்ரானின் நடவடிக்கைகள் குறித்து தேசிய பாதுகாப்புச் சபைக்குப் பிரத்தியேகமாக அறிவித்ததாக மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சஹ்ரானை 2018 மார்ச் மாதம் கைது செய்ய வேண்டியதன் அவசியத்தை இராணுவ புலனாய்வு அமைப்பு சுட்டிக் காட்டியிருந்தது. ஆனால் எந்த அதிகாரியும் கவனம் செலுத்தவில்லை.

இந்த விடயங்களை இராணுவப் புலனாய்வு அமைப்பு அறிவித்தபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய பாதுகாப்பு சபை கூட்டங்களில் கலந்து கொண்டாரா? என்ற கேள்விக்கு பதிலளித்த சாட்சி, "சஹ்ரான் ஒரு ஐ.எஸ்.சித்தாந்தவாதி என்பதை சிறிசேன அறிந்திருந்தார்"



பொலிஸ் சி.ஐ.டி.மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள விசாரணை பிரிவுகள் விசாரணைகளை மேற்கொள்ளும்போது இராணுவ புலனாய்வு அமைப்புடன் இணைந்து செயற்படத் தவறிவிட்டன.

உதாரணமாக, 2019 ஜனவரியில் வண்ணாத்துவில்லுவில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது, சி.ஐ.டி.விசாரணை நடத்த இராணுவப் புலனாய்வு அமைப்பின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்று அவர் தெரிவித்தார். (நி-7)

ஆடைத்தொழிற்சாலை பெண்ணால் கண்டிக்கும் பரவியது கொரோனா

(கொழும்பு)

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிந்த பெண் ஒருவர் அண்மையில் தனது சொந்த ஊரான கண்டிக்கு திரும்பிய நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி - கலஹா லெவலன் தோட்டத்தில் வசிக்கும் குறித்த பெண் அண்மையில் பொதுப் போக்குவரத்தில் வீடு திரும்பியுள்ளார். இவ்வாறு வீடு திரும்பிய அவர் கண்டியில் உள்ள சில கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்ததுடன் நகரிலிருந்து ஆட்டோ ஊடாக தோட்டத்திலுள்ள தனது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில் அவருக்கு கண்டி வைத்தியசாலையில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்டதில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் பயணம் செய்த ஆட்டோ சாரதி தனிமைப்படுத்தப்பட்டதுடன், பொருட்கள் வாங்கிய கடைகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (ஜ-4)

ஒருவர் கொலை

(கொழும்பு)

தினியாவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெலவத்த பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முந்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இருவருக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறே கொலைக்கான காரணம் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

தனிமைப்படுத்தல் மையத்தில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா இல்லை

(கொழும்பு)

யக்கல பகுதியிலிருந்து வெலிகந்த தனிமைப்படுத்தல் மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்த 68 வயதான பெண் மாரடைப்பால் உயிரிழந்தார் என இரா ணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யக்கல பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் வெலிகந்த தனிமைப்படுத்தல் மையத்திற்கு நேற்று முந்தினம் அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார். இவரது மகளுக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில் இவருக்கும் வைரஸ் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது. இந்நிலையில், இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

கடல் புறா

ஸ்ரீவிஜய சாம்ராச்சியம்

காலத்தின் பதிவு 14

கவலை தோய்ந்து கிடந்த அந்தச் சந்தர்ப்பத்திலும் ஈட்டிகள்போல் ஜொலித்த குணவர்மனின் கண்களைக் கண்டதும் "சேச்சே! நாம் நினைத்தது தவறு. இத்தகைய கண்களை உடையவன் ஒருகாலும் கோழையாயிருக்க முடியாது" என்ற முடிவுக்கு வந்த இளைய பல்லவன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் குணவர்மனது கதையைக் கேட்க ஆயத்தமானான்.

குணவர்மனது அந்தச் சில நிமிடங்களில் தன் தாயகத்தை உதறிக்கொண்டு இளைய பல்லவனை நோக்கி "இளைய பல்லவரே! நான் கடாரத்தின் இளவரசனாயிருக்கும் காரணம் தெரியுமா உமக்கு?" என்று ஒரு கேள்வியை வீசினான்.

"தெரியாது குணவர்மரே! தாங்கள் சொல்லித்தான் தங்களைப் பற்றிய விபரம் எதையும் நானறிய முடியும். சில நாழிகைகளுக்கு முன்புதானே நாம் சந்தித்திருக்கிறோம்!" என்று கருணாகர பல்லவன் பதில் கூறினான்.

"உண்மைதான் இளைய பல்லவரே" என்று சொல்லித் தலையையும் அசைத்து ஆமோதித்த குணவர்மன் "நான் கடாரத்தின் இளவரசனாயிருப்பதற்கு என் ஆசை காரணமல்ல. உண்மையில் கடாரத்தின் ஆட்சி பீடத்தையும் அந்த ஆட்சிபீடம் அளிக்கும் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் செல்வாக்கையும் அனைத்தையும் வெறுக்கிறேன்.

கடாரத்தின் இளவரசுப் பதவி என் தந்தையால் என்மீது சுமத்தப்பட்டது. என் இஷ்டத்திற்கு விரோதமாக" என்று பதில் கூறிய குணவர்மன் "இதைக் கேட்க உங்களுக்கு விசித்திரமாயிருக்கலாம் இளைய பல்லவரே! ஆனால் உண்மை அதுதான்.

ஆட்சிபீடத்தை நான் வெறுக்கவே செய்கிறேன். ஆனால் அது என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இது உலக விசித்திரம் வேண்டாதவனிடம் பதவி ஒட்டிக் கொள்கிறது. வேண்டுபவனை வெட்டி விலக்கித் தள்ளுகிறது" என்றான்.

குணவர்மன் சொன்னது பெரும் விசித்திரமாயிருந்தது இளையபல்லவனுக்கு. "ஆட்சியில் வெறுப்பிருந்தால் சோழ நாட்டின் உதவியை ஏன் நாடுகிறீர்கள்? கடாரத்தின் மீது படையெடுத்து ஜெயவர்மனை முறியடித்து ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சோழப் பேரரசர் வீரா ராஜேந்திரருக்கு நீங்கள் ஓலையே அனுப்பியிருந்தீர்களே?" என்று வினவினான் இளைய பல்லவன்.

இந்தக் கேள்வியால் சிறிதும் கலங்காத குணவர்மன் திடமாகவே பதில் சொன்னான். "ஓலை அனுப்பியிருந்தேன். இளைய பல்லவரே! அரச பதவியை நாடித்தான் இங்கும் வந்திருக்கிறேன். முடிந்தால் ஜெயவர்மனை விரட்டி அரசபீடத்தில் உட்காரவும் உத்தேசம்தான். ஆனால் இத்தனையிலும் பற்றுச் சிறிதுமில்லாமலே ஈடுபட்டிருக்கிறேன்.

இவையனைத்திலும் கடமை சம்பந்தப்பட்டிருக்கிறது. எந்த சைலேந்திர வம்சத்தில் நான் பிறந்தேனோ அந்த சைலேந்திர வம்சத்தைப் பற்றிய கடமை அது. ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தின் மக்களுக்கு நான் செலுத்த வேண்டிய கடமை அது. கடமைதான் என்னை இங்கு இழுத்து வந்திருக்கிறது இளையபல்லவரே! ஆசை அல்ல?" அத்துடன் மேலும் பேசத் தொடங்கிய குணவர்மன் "இளைய பல்லவரே! இதைத் தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்.

ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தின் கதை தான் என் கதை என்று. கேளும் அந்தக் கதையை" என்று கூறி, இளைய பல்லவனை விட்டுத் திரும்பி அந்த அறையின் கிழக்குப் பகுதியிலிருந்த பெரும் சாளரத்தைத் திறந்து வெளியே நீண்ட நேரம் நோக்கிக் கொண்டு பேசாமலே நின்றான்.

பல நிமிடங்கள் கழித்துத் திரும்பிய குணவர்மனின் கண்கள் ஏதோ கனவுலகத்தில் சஞ்சரிப்பன போல் காணப்பட்டன. அதுவரை கவலை மண்டிக்கிடந்த வதனத்தில் சாந்தியும் பெருமையும் நிலவிக் கிடந்தன. அந்தக் கனவுக் கண்களால் இளைய பல்லவனையும் தனது புதல்வியையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுத் தன் ஒரு கையை உயர்த்தி சாளரத்தை நோக்கி நீட்டி "இளைய பல்லவரே! இந்தச் சாளரத்துக்கு வெளியே நீர் கண்களைச் செலுத்தினால் நீலக் கடல்தான் உமது கண்களுக்குத் தெரியும்.

ஆனால் என் கண்களுக்குத் தெரிவது அதுமட்டுமல்ல. அந்தக் கடலுக்கப்பாலுள்ள சைலேந்திரர்களின் மாபெரும் அரசான ஸ்ரீவிஜய சாம்ராச்சியம் தோன்றுகிறது. பலப்பல தீவுகள் தோன்றுகின்றன. கடாரம் தோன்றுகிறது. சொர்ணத் தீவும் சாவகமும் பாலியும் தோன்றுகின்றன. அந்தத் தீவுகளில் தினம் தினம் வந்து குவியும் வணிகப் பொருள்களும் தோன்றுகின்றன.

அத்தனை வணிகப் பொருட்கள் அங்கு ஏன் வந்து குவிகின்றன? காரணம் இருக்கிறது. இளையபல்லவரே! பலமான காரணம் இருக்கிறது. உலகத்தில் சகல நாட்டினரும் விரும்பும் தங்கம் அந்தத் தீவுகளில் இருக்கின்றது. அதனால்தான் பழைய கிரேக்க மாலுமிகள் அவற்றை கிரிஸே (தங்கம்) தீவு என்றும் சொர்ணத் தீவு என்றும் சொர்ண பூமியென்றும் பலபடிப் பெயரிட்டு அழைத்தார்கள்.

அந்தத் தீவுகளில் உள்ள மண்ணில் பொன் கலந்திருக்கிறது. மண்ணை நீரில் போட்டால் தங்கம் பிரியும் அளவிற்குப் பொன் மண்ணுடன் இணைந்து கிடக்கிறது. அவ்வளவு தங்கம் உலகத்தின் எந்த நாட்டு மண்ணிலும் கிடையாது. மற்றவர்கள் தங்கள் நாட்டை ஆசையால் பொன்னாடு என்று அழைக்கிறார்கள்.

ஆனால் எங்கள் நாடு உண்மையிலேயே பொன்னாடு. பொன் ஏராளமாக விளையும் பூமி அது. அதன் பொன்னை வாரிச் செல்லவே உலக வணிகர்கள் அங்கு வருகிறார்கள்" என்று பேச்சைச் சற்று நிறுத்தி இளைய பல்லவனை உற்றுப் பார்த்தான்.

இளைய பல்லவன் முகத்தில் வியப்புதான் மிஞ்சிக்கிடந்தது. சொர்ணபூமியின் பொன்னை நினைத்து உண்டான வியப்பல்ல. சொந்த நாட்டைப் பற்றிப் பேச முற்பட்டதும் குணவர்மனுக்கு உண்டான ஆவேசத்தைக் கண்டதால் ஏற்பட்ட வியப்பு அது. அந்த வியப்பைக் கவனித்த பின்பும் குணவர்மன் ஆவேசத்தைக் கைவிடாமலே சொன்னான்.

"இந்தத் தீவுகள் உங்கள் பாரத நாட்டுடன் ஒட்டியிருந்த காலமொன்று உண்டென்று பூதத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இளைய பல்லவரே பாரதத்தின் கடற்கரையோரமாகப் போய்த் தெற்கே திரும்பினால் கிழக்கு நாடு பாரதத்தின் நிலப் பரப்புடன் தொடர்பு கொண்டே செல்கிறது.

அந்த நிலப்பரப்புடன் கடாரத்துக்குக் கீழேதான் கடல் குறுக்கிட்டு உடைக்கிறது. அப்படிக் கடல் உடைத்துப் பிரிந்த இடங்கள் தீவுகளாகிச் சொர்ணத் தீவு (சுமாத்ரா) என்றும் சாவகத்தீவு என்றும் பாலித்தீவு என்றும் வெவ்வேறு விதமான பெயர்களைப் பெற்றுத் திகழ்கின்றன. ஆனால் இந்தத் தீவுகளின் கலாசாரங்கள் பொதுப்படையானவை. பழைய காலத்தில் இவை ஒன்றுபட்டிருந்ததைக் குறிக்கின்றன.

அதுமட்டுமல்ல பாரதத்துக்கும் அவற்றுக்கும் யுகாந்தரமாக இருந்து வரும் தொடர்பையும் குறிக்கின்றன. அங்குள்ள சைவமும் வைணவமும் பௌத்தமும் பாரத நாடு அளித்தவை. அங்குள்ள சிற்பமும் சித்திரமும் கோயிலும் குளமும் இலக்கியமும் எல்லாமே இந்த நாடு அளித்தவைதான். (தொடரும்)

ஊரடங்கை மீறிய 79 பேர் கைது

(கம்பஹா)

கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில், ஊரடங்கு உத்தரவை மீறி செயற்பட்ட 79 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டியொன்றும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பாராளுமன்ற ஊழியரின் உறவினருக்கு கொரோனா

(கொழும்பு)

பாராளுமன்ற அலுவல்கள் சேவை பிரிவில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரின் உறவினர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவருடன் தொடர்புகளை பேணிய ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்லை, பெலவத்தையில் அமைந்துள்ள பாராளுமன்ற அலுவல்கள், சேவை பிரிவின் கட்டடத்தொகுதியில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் உறவினருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற அலுவல்கள் சேவைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அந்த பிரிவுக்குள் வெளியாட்களை அனுமதிக்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

பல்கலை. உபவேந்தர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கல்விநடவடிக்கைகளை வழமை போன்று முன்னெடுக்குமாறு அனைத்து உப வேந்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சில விரிவுரைகளை Online தொழில்நுட்பத்தினூடாக முன்னெடுக்குமாறும் அவர் கூறியுள்ளார். (ஜ-4)

பிரியங்கவின் வழக்கை முன்னெடுத்த தமிழ் சட்டத்தரணி மீது கொலை முயற்சி

(லண்டன்)

லண்டனில் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு கழுத்தறுப்பு சமிக்ஞை மூலம் கொலை மிரட்டல் விடுத்த இராணுவ அதிகாரி பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கை முன்னெடுத்த பிரித்தானியாவின் பிரபல சட்ட ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் மீது நேற்று முன்தினம் ஒரு கொலை முயற்சி இடம்பெற்றுள்ளது.

அதில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பித்துள்ள போதும் அவரது கார் படுசேதம் அடைந்துள்ளது. இது அவர் மீது நடத்த மூன்றாவது கொலை முயற்சி சம்பவம் என்று கூறப்படுகின்றது.

பிரித்தானிய பொலிஸார்

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

ஐக்கிய அரபு இராச்சியம்- இலங்கை விமான நடவடிக்கை இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்பாராத கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான சகல விமான நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அபுதாபியிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்ல எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் விமான நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்படும் வரை பொறுமையாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான செயன்முறை குறித்து உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-7)

நீதிக்காக குரல் கொடுத்த சிவாச்சார்யார் புங்குடுதீவில் படுகொலை

நடந்தது என்ன?

ஜெயம் ஜெகன்

இலக்கம் நூறு, கனகாம்பிகைக் குளக் கிராம வீதியை வட மாகாண ஊழியர் நலன்புரிச் சங்கம், புங்குடுதீவு இளந்தமிழ் மன்றம், புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான திருப்பணிச் சபை, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள், புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய அனைத்துலகப் பேரவை, தீவக விருட்சம், செண்பகம் தீவகம், ஊரதி சனசமூக நிலையம் ஆகிய பெயர்களைத் தாங்கிய கண்ணீர்ப்பதாகைகள் அலங்கரித்திருந்தன. அதனால் வழியில் இழவு வீட்டை விசாரித்து விளக்கம் பெற வேண்டிய தேவையேற்படவில்லை.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி பிறந்த, புங்குடுதீவு-ஊரதீவு சிவன் ஆலயச் சிவாச்சாரியார் இராசையா இராஜரூபசர்மா 03.10.2020 அதிகாலையன்று அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறையினரும் யாழ்ப்பாணத் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவ இடத்திற்கு ஊர்காவற்றுறை நீதவான் அந்தோனிப்பிள்ளை ஜோட்சன், யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் ஆகியோர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். சிவாச்சாரியாரின் தலையின் பின் பக்கத்தில் இரும்புக் கம்பியால் தாக்கியே சிவாச்சாரியார் கொலை செய்யப்பட்டார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முப்பத்து மூன்று வயது நிரம்பிய இராசையா இராஜரூபசர்மாவை வீட்டில் ரூபன் என்றே அழைப்பார்கள். இவருக்கு இரண்டு அக்காவும் இரண்டு தம்பிமார்களும் உள்ளனர். தனது பதின் மூன்று வயதினில் தந்தையாரை இழந்தார். இவரைத் தாயார் மிகவும் அன்பாகவும் அரவணைப்பாகவும் வளர்ந்து வந்தார். இதனால் ஆன்மீகத்தில் மிகவும் நாட்டமிவருக்கு ஏற்டலாயிற்று. தந்தையையிழந்து நின்ற இவரது குடும்பம் பொருளாதார இறுக்கத்திற்குள் சிக்கியது. தாயாரின் விடாமுயற்சி மாடுகளை வளர்த்து பயன்பெற வைத்தது.

பின்னர் தமது 1 1/2 ஏக்கர் காணியில் தென்னம்பிள்ளைகளை வைத்து அதிலிருந்து பொருளாதாரத்தை ஈட்டிக் கொண்டார். இவ்வாறான நிலைமையிலும் ஐந்து பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் தாயார் முன்மாதிரியானார். வீட்டில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

2009 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து குடும்பப் பொறுப்பை இராசையா இராஜரூபசர்மா ஏற்று குடும்பத்திற்காக உழைத்து வந்தார். இரண்டாவது அக்காவிற்கு திருமணம் நடைபெறும் வரை தனது திருமண வாழ்க்கையைச் சிந்திக்காமல் இருந்தார். இறுதியாக கிளிநொச்சியிலுள்ள தனது வீட்டிற்கு 2020.09.30 ஆம் திகதி வந்து நின்று மறுநாள் காலையில் தம்பியாரோடு சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

> “சர்மா கோலத்தில் கண்ட எனது மகனை சடலமாகக் கண்டேன்.
> -கதறும் தாய்-”

“மூவரும் மது அருந்திவிட்டு இரும்புக் கம்பியால் பூசகரின் பின் தலையில் அடித்துக் கொன்றோம். இந்தச் சம்பவம் சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியிருக்கும் என்பதால் அதன் ‘ஹார்ட் டிஸ்க்’கையும் எடுத்துச் சென்று மறைத்தோம்”

மறைக்கப்பட்ட ‘ஹார்ட்டிஸ்க்’கும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. மேலும், பூசகரின் உடைமையில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்த கொலைச் சந்தேகநபர்கள் அதனை இரு பெண்களிடம் கொடுத்து யாழ். நகரில் சில பொருட்களை வாங்கியுள்ளனர். இதனால், சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தனர் என்ற சந்தேகத்தில் இரு பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜோட்சன் விசாரணைகளை நடத்தினார். இந்த விசாரணையை இணைந்து நடத்திய யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி மயூரன், பூசகர் வலுவான ஆயுதம் ஒன்றால் பின் தலையில் தாக்கப்பட்டமையாலேயே உயிரிழப்பு ஏற்பட்டது” என்பதை உறுதி செய்தார்.

எல்லோரையும் நேசிக்கவும் மதிக்கவும் முன்வருவார். ஆலயப்பணிக்காக அயராது உழைத்து வந்தார். பிற மாவட்டங்களுக்கும் சென்று வழிபாடுகளை நடத்தி வந்தார். வழிபாடுகளுக்காக பல இடங்களிலிருந்து மக்கள் இவரை விரும்பி அழைப்பார்களாம்.

ஒவ்வொரு விடயங்களையும் ஆறுதலாகவும் நிதானமாகவும் செயற்படுத்துவார். சமூக நீதிக்காகப் பலவழிகளில் குரல் கொடுத்த சிவாச்சாரியார் புங்குடுதீவுக்கிராமத்தை வளர்த்தெடுக்கத் தன்னாலான பணிகளைச் செய்து வந்தார்.

அங்குள்ள மக்களோடு மிகவும் நேசமாகவும் பண்பாகவும் பழகிவந்தார். ஆன்மீகம், சமூகம் எனத்தம்மை அர்ப்பணித்த சிவாச்சாரியாரின் படுகொலைக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும்.

சிவாச்சாரியாரின் தாயார் 63 வயதான இராசையா சித்திரதேசியால் அழவும் மௌனம் காக்கவும் தான் முடிந்தது. பல மணி நேரத்திற்குப் பின்னர் தான் மெல்ல வாய்திறந்து பேசலானார்.

என்ர மகன் நல்லவன். யாரோடும் அன்பாகப் பழகுவான். யாரும் வழியில் நடந்து சென்றால் தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு போய் இறக்கி விடுவான். மோட்டார் சைக்கிள் பெற்றோல் இல்லாமல் வழியில் நின்றால் அந்த இடத்திற்குச் சென்று பெற்றோல் கொடுப்பார். இரவு பகலாக ஆலய மக்களுக்காக உழைத் தார்.

மகன் வீதி விபத்தால், இயற்கையால், நோய் வாய்ப்பட்டு இறந்திருந்தால் மனம் ஓரளவு தாங்கியிருக்கும். கொடூரமான முறையில் எனது மகனை அடித்துக் கொன்று போட்டார்கள். அவன் உயிர் பிரியும்போது எவ்வளவு துடிதுடித்திருப்பான். என்ர மகன் யாருக்கும் அநியாயம் செய்யவில்லை.

2000 ஆம் ஆண்டு எனது கணவர் மாரடைப்பால் இறந்தார். அன்றிலிருந்து தந்தைக்குத் தந்தையாக, தாய்க்குத் தாயாக இருந்து எவ்வளவு துன்பங்கள் பட்டு எனது ஐந்து பிள்ளைகளையும் வளர்த்து வந்தான். மாடு வளர்த்தும், தேங்காய் விற்றும் தான் பிள்ளைகளை வளர்த்தான். இறுதிச் சண்டை நேரத்தில் விசுவமடு, தேவிபுரம், இருட்டுமடு, முள்ளிவாய்க்கால் வரை இடம் பெயர்ந்து ஆற்றலைந்தோம்.

இறுதியுத்த நேரத்தில் எனது ஐந்து பிள்ளைகளையும் ஒருவாறாகப் பாதுகாத்து வவுனியா இடம்பெயர்ந்தோம். 2009 இன் இறுதிப் பகுதியிலிருந்து குடும்பச் சுமைகளை ரூபன் தான் பொறுப் பெடுத்துச் செய்து வந்தார். அக்காமார் இருவருக்கு பாதுகாப்பாகவும், தம்பிமார் இருவருக்கும் உதவியாகவும் அன்று முதல் இன்று வரை இருந்தார். எனது பிள்ளை எனது இரண்டாவது மகள் திருமணம் செய்த பின்னர் தான் தாம் திருமணம் செய்வதாகப் பல முறை கூறினார். 33 வயதில் எனது மகனை அடித்துக் கொடூரமாகக் கொண்டு போட்டார்கள்.

வீட்டிற்கு வருகின்ற போது இங்கிருந்து தேங்காய், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றை தனது வாகனத்தில் ஏற்றிச் செல்வார். ஆலய மக்களோடு சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை யாவரோடும் அன்பாக இருந்தார். (தொடர்ச்சி 19 ஆம் பக்கம்)

ஆன்மீகம்

அன்னை- தந்தையே ஆரம்ப ஆசிரியர்கள்!

(நேற்றைய தொடர்ச்சி)

பிரசவ காலத்திலேயே இப்படி என்றால் கண் திறந்து வெளி உலகைப் பார்க்கும்போது குழந்தையின் மூளைப் பதிவுகளை என்னென்று வியப்பது? நம் நடத்தைகள் குழந்தைகளைப் பாதிக்கின்றன. நம் செயல்கள் தான் குழந்தைகளுக்குப் பாடங்கள் போதிக்கின்றன.

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்பதும் இதைத்தான் குறிப்பிடுகிறது. ஒரு பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவனிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. தினமும் பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது மற்ற மாணவர்களின் பேனா, பேப்பர், பென்சிலை அவர்களுக்குத் தெரியாமல் திருடிச் செல்வான்.

இந்த விடயம் ஆசிரியருக்குத் தெரிய அவர் அவனைக் கண்டித்தார். அவன் தந்தையாரிடம் இதைப் பற்றி சொன்னார். மாணவனின் அப்பாவிற்கு கோபம் வந்தது.

தன் பல்லைக் கடித்து, நாக்கை மடித்து அவனருகில் சென்று 'ஏன்டா, இப்படிச் செய்வதற்கு உனக்கு அசிங்கமாக இல்லையா? நான்தான் தினமும் அலுவலகத்திலிருந்து பேனா, பேப்பர் எல்லாம் கொண்டு வந்து தருகிறேனே' என்றார்.

பெற்றோர் எவ்வழி, பிள்ளைகள் அவ்வழி. நம் 'ஜெராக்ஸ்' பிரதி தான் குழந்தைகள் என்பதைப் பெற்றோர் உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கிரேக்க நாட்டின் தெரு ஒன்றில் பலர் கூடி ஒரு சிறுவனை அடித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வழியே சென்ற கிரேக்க ஞானி டயோஜனஸ் அவர்களை விலக்கி விட்டு 'ஏன் இவனை எல்லோருமாகச் சேர்த்து தண்டிக்கிறீர்கள்' என்று கேட்டார்.

'கேட்கக் கூசுகின்ற மோசமான வார்த்தைகளை இவன் பேசுகின்றான்' என்றனர் கூட்டத்தினர். தத்துவஞானி டயோஜனஸ் உடனே, அதற்காக இவனை அடிப்பது கூடாது.

இவன் தந்தை யார் என்பதை அறிந்து அவனைப் பிடித்து அடியுங்கள். மகனுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தராத தந்தையே தண்டனைக்கு உரியவன்' என்றார்.

பிள்ளைகளுக்கு பொக்கெட் மணி தருவதும், கேளிக்கை நிகழ்ச்சிகளில் அவர்களைப் பங்கு பெறவைப்பதும், தொலைக் காட்சிப் பெட்டி அருகி லேயே அவர்களைத் தொலைத்து விடுவதும், மதிப்பெண் வாங்கும் இயந்திரமாக அவர்களை மாற்றி விடுவதும் தற்போது பல பெற்றோர்களின் வாழ்க்கையாகி வருகிறது.

'அள்ளிக் கொடுத்த செம்பொன்னும் அரை ஆடையும்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும்
என்னைக் குறித்தது அல்லால் நான்
துள்ளித் திரிகின்ற நாட்களிலே
என் துடுக்கை அடக்கி
பள்ளிக்குப் பெற்றோர் வைத்திலரே!'

- என்று நம் பழந்தமிழ்ப் பாடல் ஒன்று புலம்புகிறது.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'

'விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா'

'மகன் அறிவு தந்தை அறிவு'

- போன்ற நம் முதுமொழிகளைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

காட்டில் மூங்கில்கள் விளைகின்றன. அந்த மூங்கிலில் ஒன்று புல்லாங்குழல் ஆகிறது. ஒன்று பல்லக்கை அலங்கரிக்கின்றது. ஒன்று அடுப்பூதும் குழல் ஆகின்றது. இன்னும் ஒன்று இற்ந்தவர் சடலத்தை எடுத்துச் செல்ல பயன்படுகிறது.

எந்த இடத்தில், யார் கையில் போய்ச் சேர் கிறதோ அதற்கேற்பவே மூங்கில் பயன்படுகிறது.

மூங்கிலை மோகனப் புல்லாங்குழல் ஆக்குவது வளர்க்கும் பெற்றோர் கள் கையில் தான் உள்ளது.

ஒளிமயமான உலகத்தில் நாம் வாழ்வதற்கு மூல காரணம் தோமஸ் அல்வா எடிசன் என்ற பிரபல விஞ்ஞானி கண்டுபிடித்த மின்சார பல்புகளே என்று நாம் அறிவோம்.

ஆனால், அவருக்கு ஒளிமயமான காலத்தை உருவாக்கிக் கொடுத்தவர் யார் தெரியுமா? அவரைப் பெற்றெடுத்த தாயாரே! எடிசன் பள்ளியில் படித்தது வெறும் மூன்று மாதங்களே! எடிசனின் பள்ளி ஆசிரியர் அவன் தாயிடம் சொன்னார்: 'உங்கள் மகனுக்கு படிப்பு ஏறாது. காது மந்தமாக உள்ளது'. அதனால் அம்மா வருந்தவில்லை. போராடி அவனைப் புகழ் பெற்ற வன் ஆக்கினாள்.

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி
அவையத்து
முந்தி இருப்பச் செயல்'

- என்று திருக்குறளும்,

'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'

- என்று புறநானூறும் குறிப்பிடுகிறது. 'ஆரம்ப ஆசிரியர்கள் அன்னை- தந்தையே' என்பதை நாம் உணர்ந்தால் வருங்காலச் சிறப்பாக அமையும்.

நீதிக்காக குரல் கொடுத்த சிவாச்சார்யார் புங்குடுதீவில் படுகொலை

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

அன்பாக இருப்பவர்களுக்கு காலமே இல்லையா. இப்பத்தான் எமது குடும்பம் கொஞ்சம் நிமிர்ந்து வரும் வேளையில் எனது மகனை மூர்க்கத் தனமாகக் கொலை செய்து விட்டார்கள் 04.10.2020 அன்று அதிகாலை நேரம் புங்குடுதீவிலிருந்து எனக்கு அழைப்பு வருகின்றது.

நான் கதைக்கும் போது உங்கள் மகனிடம் போனைக் கொடுங்கள் என்று ஒரு குருக்கள் கேட்டுக் கொண்டார். நான் மகனிடம் போனைக் கொடுத்தேன். மகனிடம் குருக்கள் உங்கடஅண்ணாவை யாரோ அடிச்சிட்டார்கள் என்று கூற மகன் உடனடியாக அம்புலன்ஸ்க்கு அடிக்க அண்ணாவை ஏற்றிக் கொண்டு போங்கோ என்று கூறினார்.

நாங்கள்உடனடியாகவெளிக்கிட்டுபுங்குடுதீவுக்குப்போனோம். அங்கு எங்கே மகனைக் கண்டேன். மகனின் பிணத்தையல்லவா கண்டேன். சர்மா கோலத்தில்கண்டஎனதுமகனைஅன்று சடலமாகக் காண நேர்ந்தது. மகனின் முகத் தோற்றமே மாறியிருந்தது. எனது மகனுக்கு நடந்த இந்த கொடூரச் செயல் எந்த மனிதனுக்கும் இனி நடக்கக் கூடாது. உயிர் என்பது அவ்வளவு துரும்பா, போன உயிரை யாராலும் தரமுடியாது.

ஆதலால் ஒட்டுமொத்தச் சமூகத்திடமும் இந்து மாமன்றத்திடமும் தயவன்புடன் நான் கேட்டுக் கொள்வது, எந்தவொரு இந்து ஆலயத்திற்கு ஒரு குருக்களையோ ஒரு பூசகரையோ நியமிப்பதாக இருந்தால் அவர் தொடர்பான விடயங்களை அறிந்து நியமிக்க வேண்டும். அவரின் குடும்பப் பின்னணி என்ன? எவ்வகையான நடத்தையுடையவர்.

இந்த ஆலயத்திற்கு இவர் பொருத்தமானவரா? பூசை செய்வதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறாரா? என்றெல்லாம் ஆராய வேண்டும். சாதாரண ஒரு நேர்முகத்தேர்விற்கே குணநலச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கடதாசிச் சான்றிதழ்கள் எனப்பல வகையான ஆவணங்களைக் கையளிக்கும் போது ஓர் ஆலயத்திற்கு குருக்களை நியமிக்கும் போது இதற்கு மேலான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று கரங்களைக் குவித்து கண்ணீர் சிந்தி வேண்டினார்.

சிவாச்சாரியார் இராசையா இராஜரூபசர்மா உடல் 05.10.2020 அன்று திங்கட்கிழமை இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்து மக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் 2020.10.12 அன்று மாபெரும் ஊர்வலம் வவுனியாவில் நடைபெற்றது என்ற செய்தியைப் படித்து இரு நாட்கள் கடக்க முன்னர் புங்குடுதீவு இந்துமக்களுக்கு பேரிழப்பு ஒன்று நிகழ்ந்தது.

உலகத்தையே திரும்பிப்பார்க்க வைத்த முதலாவது சோக நிகழ்ச்சியை 2015.05.13 அன்று புங்குடுதீவுத் தாயவள் பதிந்து கொண்டாள். மீண்டும் இரண்டாவது சோக நிகழ்ச்சியை 2020.10.03 அன்று புங்குடுதீவுத்தாயவள் கண்ணீரோடு எழுதிக்கொண்டாள். மூன்றாவது சோக வரலாறு இடம்பெறாது இருக்க சமூக மட்ட அமைப்புக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

வீட்டுக்கு வீடு இராணுவம்

(கொழும்பு)

தம்மை அடையாளப்படுத்தத் தவறிய ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை கண்டுபிடிப்பதற்காக வீட்டுக்கு வீடு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையின் சில ஊழியர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று தம்மை அடையாளப்படுத்தத் தவறிவிட்டனர்.

இதன் விளைவாக, இந்த ஊழியர்களைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டுக்கு வீடு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலுக்கான மூலத்தைக் கண்டறிய, சுகாதாரத் தரப்பினரும், பாதுகாப்புத் தரப்பினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று சம்பவத்தைத் தொடர்ந்து, அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

கொரோனா வைரசும் இன்றைய கல்வியும்

கொரோனா வைரஸ்
கொலைகார நோய்
கரணம் தப்பினால்
மரணம்
திண்ணம்
நரக வேதனை நீண்ட
வண்ணம்
பரவல் தடுத்தல் பலரின்
எண்ணம்

கொடுநோய் தாக்கம்
குறைவதாய் இல்லை
படுவேகம் கொண்டு
பலரை
மாய்க்கிறது
நடுங்க வைத்து நாளும்
எகிறுகிறது
படுபாதாளத்தில் பல
நாடுகள்

ஊரடங்கு எங்கும்
உறுதியாய் நிலைத்தது
பாரடங்கி விட்டு பலன்
கிடைத்தது
பேரடங்கி மனிதரில் பகை
குறைந்தது
மூச்சடங்கி நித்தம்
முடிவைத் தந்தது

பள்ளிகள் மூடி பலரும்
வீட்டில் தள்ளியே
இருக்கும்
தருணம் ஆச்சு
வெள்ளைச் சீருடை
கல்வியை மறந்து
துள்ளிக் குதித்து தூணை
உடைக்கிறது

புத்தகம் தூக்க புதுவழி
பிறக்காதோ
பார்த்திருந்த எங்களுக்கு
பதிலால் மகிழ்ந்தோம்
தொலைக்காட்சிக் கல்வி
துணையாக வந்தது
தூக்கினோம் கொப்பியை
தொடங்கினோம் ப்டிப்பை
தெளிவற்று நின்று
திகைத்த எமக்கு
வழிகாட்ட வந்தது
தொலைபேசிக் கல்வி
அழிக்க நேரமில்லை
அனைத்தும் ஏறவில்லை
விழிகள் பிதுங்கி
விடையற்றுத் தவிக்கிறோம்

இணையக் கல்வி
இப்போது ஆரம்பம்
இலவசச் செயலி
இயங்கத் தொடங்கியது
கலக்க மனதுடன் கற்றல்
தொடர்கிறது
வழக்கம் மாற்றுதல்
மாணவர்க்கு
பிடிக்கவில்லை

எக்கல்வி வந்தாலும்
ஏட்டுக் கல்வியே சிறந்தது
எப்போது அழியும்
எம்நாட்டில் கொரோனா

ச. குபேரன்
A/L (2021)
யாழ். உடுத்துறை ம.வி

வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

மூலிகைகளின் அரும்பயன்கள்



வெள்ளைப் பூண்டு: காதுவலி, காதினுள் கட்டி, சைத்தியம் போன்ற பிணிகளை உடனடியாக நிவர்த்தி செய்யும். காதில் சில சமயம் 'கும்' என்ற ஓசை எழுதுவதுண்டு. இதை அலட்சியமாக விட்டுவிட்டால் பின்னால் காது செவிடாகிவிடக்கூடிய அபாயம் உண்டு. இதற்கு வெள்ளைப் பூண்டை உரித்து ஒரு பல் எடுத்து எந்தக் காதில் 'கும்' என்ற ஓசை எழுகிறதோ அதில் செருகி வைத்தால் அரை மணி நேரத்தில் குணம் தெரியும். ஒடிந்துபோன எலும்பை ஒட்ட வைக்கும் தன்மையும் வெள்ளைப்பூண்டுக்கு உண்டு. அடிபட்ட காயத்திற்கு வெள்ளைப்பூண்டை நசித்து சுண்ணாம்பு சேர்த்து தடவி விட்டால் நிச்சயமாக ஆறும். ஆறிய பிறகு தான் போடப்பட்ட மருந்து விடுபட்டு விழும்.

தொகுப்பு:- புத்தூர் பொது நூலகம்.

ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

குடி உயரக் கோன் உயரும்



குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனையும் முல்லை, மருதம் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் திருமால் மற்றும் இந்திரனையும் வணங்கி வந்தார்கள்.

நெய்தல், பாலைப் பகுதி மக்களுக்கு வருணனும் காளியுமே கடவுள்கள். அதே கால கட்டங்களில் சைவம், வைணவம் போன்ற சமயங்கள் மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

களப்பிரர்களின் ஆதி காலச் சமயமாகக் கருதப்படுவது வைணவம். இந்து சமயத்தில் மும் மூர்த்திகளாகக் கருதப்படும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரில் விஷ்ணுவை முழு முதற் கடவுளாகத் தொழுவது வைணவமாகும்.

களப்பிரர் காலத்தில் சமணமும் பௌத்தமும் செழித்து வளர்ந்ததால் சைவம், வைணவம் போன்ற சமயங்கள் நலிவடைந்தன. பின்னர் பல்லவர்கள் காலத்தில் வளரத் தொடங்கிய சைவமும் வைணவமும் சோழர் காலத்தில் பொலிவு பெற்றன. தீவிர சிவபக்தர்களாக சோழ மன்னர்கள் விளங்கினார்கள்.

ராஜராஜன் எப்பேர்ப்பட்ட சிவபக்தன் என்பதற்குப் பெரிய கோயிலில் சிறந்த உதாரணம். சோழர்கள் ஆண்ட காலம் தான் சைவத்தின் பொற் காலம். சோழர் காலத்தில் சைவம், அரசாங்கத்தின் சமயமாகவே இருந்தது.

சைவம், மதக்குருவின் மூலம் தீட்சை பெறுவதை வலியுறுத்துவதால் இம்முறைப்படி, ராஜராஜனிடம் இரண்டு ராஜகுருக்கள் இருந்திருக்க வேண்டும் என்று தெரிய வருகின்றது.

இருவரில் தஞ்சைப் பெரிய கோயிலைப் போற்றிப் பாடியவரான கருவூர்த் தேவர் என்னும் அருளாளர் மிக முக்கியமானவர். கருவூர்த் தேவரும் ராஜராஜனும் சிறந்த நண்பர்களாக இருந்திருக்கிறார்கள். கருவூர்த்தேவர், பெரிய கோயிலைப் பற்றிப் பாடிய பாடல்கள் சைவத் திருமுறைகளுள் ஒன்பதாவதான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

நாயன்மார் வரலாறுகளும் திருப்பதிகங்களைக் கோயில்களில் ஓதுதலும் பல்லவர் காலத்திலேயே இருந்தன. இதை அறிந்த ராஜராஜன், தேவாரப் பாக்களைத் திரட்டித் தொகுக்கச் செய்தார்.

சைவ அந்தணரான நம்பியாண்டவரால் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் படிமங்கள் (சைவத் திருமுறைகள்) தொகுக்கப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டன. கோயில்களில் இத்திருமுறைகள் ஓதப்பட்டன.

பெரிய கோயிலில் திருப்பதிகம் ஓத 48 பேர் நியமிக்கப்பட்டார்கள். சமஸ்கிருத வேதங்களோடும் தமிழ்ப் பாடல்களுக்கும் நல்ல மரியாதை இருந்த காலகட்டம் அது.

(தொடரும்)

பிடித்த காரியத்தை செய்ய வேண்டும் என்பதை விட செய்யும் காரியத்தை நமக்கு பிடித்ததாய் மாற்றிக் கொள்ள வேண்டும். – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

இளைஞர்களே! விவசாயத்துறை உங்களை வரவேற்கிறது!

நம் நாட்டின் அபிவிருத்தி இன்னமும் மந்த மாக இருப்பதற்கான காரணம் என்ன எனக் கண்டறிவதற்கான ஏற்பாடுகள் ஏதும் இருப்ப தாகத் தெரியவில்லை.

மாறாக நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நியாய மான குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆராயப் படுமாயின், அரச உத்தியோகத்தின் மீதான மோகமே எங்கள் நாட்டை நலிவடையச் செய் துள்ளதென்பது அறியப்படும்.

ஆம், இலங்கையில் கல்வி என்பது அரச உத்தியோகத்துக்கானதென்ற எண்ணக்கரு தனியாள் மனங்களில் வலிமை பெற்றுள் ளது.

இஃது இளம் சந்ததியின் ஆளுமையை தகர்த்து விடுகிறது.

படித்தால், பரீட்சையில் சித்தியடைந்தால், பட்டம் முடித்தால் அரசாங்கம் தேடிவந்து வேலை தர வேண்டும்.

படித்துவிட்டு விவசாயம் செய்வதா?, கடற் றொழில் பார்ப்பதா?, கால்நடை வளர்ப்பதா?, நெல் விதைப்பதா?, விவசாயப் பண்ணைகளை நடத்துவதா? என்ற கேள்விகள் சுயகௌர வத்தோடு பொருத்திப் பார்க்கப்படுகின்றன.

அரச வேலை செய்பவர்களுக்கு மட்டுமே கௌரவம் என்று நினைக்கின்ற சின்னத் தனம் இல்லாது போகும்வரை எங்களின் பொருளாதாரப் பலம் என்பது எப்போதும் மந்த மாகவே இருக்கும்.

எனவே, இந்த மடமைத்தனம் உடைக்கப் பட்டு படித்தவர்கள், பட்டதாரிகள் விவசாயம் செய்யவும் கடற்றொழில் புரியவும் கால்நடை வளர்க்கவும் முன்வர வேண்டும்.

இவ்வாறான முயற்சிகள் கோடிக்கணக் கான வருமானத்தை ஈட்டக்கூடியதான சூழ மைவை உருவாக்கியுள்ளது.

எனவே எம் இளம் சந்ததியினர் படித்துப் பட்டம் பெற்று அரச பணிக்காகக் காத்திருத் தல் என்ற வழமையைக் கைவிட்டு; ஏக்கர் கணக்கில் தென்னந்தோட்டம் செய்யவும், மாந்தோப்பை உருவாக்கவும் பசும்பால் உற் பத்தியைப் பெருக்கப் பண்ணை அமைக்கவும் முன்வருதல் அவசியம்.

இவ்வாறு எம் இளம் சமூகம் விவசாயத் துறையை நாடி வருவதற்கு விவசாய அமைப் புகள் ஆக்கமும் ஊக்கமும் அரவணைப்பும் கொடுத்தாக வேண்டும்.

அரச காணிகளில் செய்கை செய்வதற் கான அனுமதிகளும் மானிய உதவிகளும் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங் கப்படும்போது விவசாயத்துறைக்குள் கணிச மானவர்களை உள்ளீர்க்க முடியும்.

இதற்கு மேலாக, எங்கள் தாயக மண் ணில் உரிமை கோரப்படாமல் இருக்கின்ற மாடு களை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் களில் பண்ணைகளை உருவாக்க வேண்டும்.

இதைவிடுத்து, எந்த உத்தரவாதமும் இல் லாமல் பசு மாடுகளை வெளியிடங்களில் உள்ளவர்களுக்கு விற்பனை செய்யும்போது, அவை இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற வாய்ப்புகள் ஏற்படலாம்.

ஆகவே, இவை அனைத்திலும் கவனம் செலுத்தி விவசாயத் துறையை உயர்வடை யச் செய்வோமாக.

கொரோனாத் தொற்று குறித்த தவறான தகவல்களை நம்ப வேண்டாம்

ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

கொரோனா தொற்று தொடர்பான தவறான தகவல்களை நம்ப வேண் டாமென ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ அறிவு றுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர் பாக நேற்று வியாழக் கிழமை முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர், "கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் உலகெங் கும் பரவிக்கொண்டிரு ந்த வேளையில், ஒரு பலமான தேசமாக நாம் அனைவரும்ஒன்றிணை ந்து அதனை தோற்கடி த்து வெற்றி கண்டோம்.

தற்போது கொரோனா வைரஸ் மீண்டும் நம் நாட்டிற்குள் வந்துள்ளது. முன்னரைப் போலவே, எமது சுகாதார, பாதுகாப்பு மற்றும் ஏனைய சேவை துறைகளைச் சேர்ந்த வர்கள் இந்த அச்சுறுத்த லில் இருந்து நம்மைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

இந்த சவாலான சூழ்நிலையில், சுகாதார அதிகாரிகள் வழங்கும் அறிவுறுத் தல்களைப் பின்பற்றுவதோடு, பல் வேறுபட்ட பொய்ப்பிரசார குழுக்களால் பரப்பப்படும் தவறான பிரசாரத்திற்கு ஏமாறாமல், உத்தியோக பூர்வ அரசாங்க தகவல் சேவைகளிலிருந் து தேவையான தகவல்க ளைப் பெற்று அதன்படி செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என பதிவிட்டுள்ளார். (ஜ-4)

இலங்கை வந்த இந்திய ஊழியர்கள் எங்கே? முழுமையான தகவல்களைத் தரவேண்டும்

மனுஷ நாணயக்கார கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட தொழில்நுட்ப அதிகாரிகள் இன்னமும் இலங்கை யில் உள்ளனரா? அவர் களுக்கு முறையான பரி சோதனைகள், தனிமை ப்படுத்தல் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட் டதா? என்றஉண்மையை அரசாங்கம் சபைக்கு அறி விக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சி சபை யில் கேள்வியெழுப்பியது.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சபை அமர்வுகளின் போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இந்த கேள்வி களை எழுப்பினார்.

பிரெண்டிஸ் நிறுவன த்தில் பணிபுரிந்த ஊழி யருக்கு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதியளவில் கொரோனா வைரஸ் தொற்றியிருக்க வேண் டும் என ஊடகங்கள் மூல மாக அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதே போல் 27 ஆம் திகதியள வில் நிறுவனத்தில் குறிப் பிட்ட சில எண்ணிக் கையானவர்களுக்கு காய்ச்சலும் இருந்ததாகவும் ஆனால் இது குறித்து நிறுவன முகாமைத்து வம் நடவடிக்கை எதனை யும் எடுக்கவில்லை என அந்த நிறுவனத்தில் பணி புரியும் ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியாவில் இருந்து கொண்டுவரப் பட்ட துணிகளில் தான் ஆடை 'தைத்ததாகவும் தெரிவித்தார். மேலும் கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்தியாவில் இரு ந்து தொழில்நுட்ப குழு ஒன்று மத்தள விமான நிலையத்திற்கு வந்துள் ளது. இதற்கும் அப்பால் மேலும் இரண்டு விமா னங்களில் இந்திய அதி காரிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் சிலர் வர வழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவர்கள் முறையாக தனிமைப்படு த்தலுக்கு உட்படுத்தப்ப ட்டனரா? அவர்கள் இன் னமும் இலங்கையில் உள்ளனரா? அப்படி தனி மைப்படுத்தப்பட்டிருந்தால் எங்கு? எப்போது? தனிமை ப்படுத்தலுக்குட்படுத்தப் பட்டனர் எனவும் அவர் கள் பெயர் உள்ளிட்ட முழு மையான தகவல் களை பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்க வேண்டும் என சுகா தார அமைச்சரிடமும், கொவிட் செயலணியிட மும் கேட்டுக் கொள்கி றோம்எனவும்அவர்சபை யில் தெரிவித்தார். (நி)

இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

தண்ணீர்க் குடமென்பது சரீரம். அதில் நிறைந்த தண்ணீர் ஜீவான்மா. முதலில் இட்ட ஒட்டை தனேஷனை (பணத்தாசை), இரண்டா வது இட்ட ஒட்டை தாரேஷனை (மனைவி மேல் வைத்த ஆசை), மூன்றாவது இட்ட ஒட்டை (மக்கள் மேல் வைத்த ஆசை) இந்த மூன்று ஆசைகளாகிய ஒட்டைகளின் வழி சரீரத்திலி ருந்த ஆன்ம சைதன்யமாகிய உயிர் சிந்தி விட்டது. இந்த ஆபாசத்தைத் திரும்பிப் பாரா மல் நீ அறநெறியில் செல்வாயாக என்ற குறி ப்பை நாவிதனார் காட்டுகிறார். (தொடரும்)

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

சத்தியம் பரம் தீமஹி

எது வேண்டுமானாலும் அறிவிலிருந்து பெருக்கெ டுக்கக்கூடும். அது குப்பையாக இருந்தாலும் அல்லது விவேகமாக இருந்தாலும் நீயே அந்தப் பெருக்கிற்குச் சாட்சி. "விவேகம், தெய்வீகம், சத்தியம் இவை அறி விலிருந்து தங்கு தடையின்றி தொடரட்டும்" என்று தெய்வத்தைப் பிரார்த்திப்பது மட்டுமே நீ செய்யக் கூடியது.

பயிற்சி: உங்கள் பெயர்களை விட்டு விடுங்கள். ஒரே பெயரை ஒரு மாதத்திற்கு எல்லா சத்சங்கிகளுக் கும் கொடு. பெயர் உன்னைப் பொருத்தது. கிறிஸ், மைக்கேல் அல்லது கிருஷ்ணா என யாரைக் குறித் தாயினும் சரி, நீயே அதைத் தேர்ந்தெடு.

கேள்வி: இந்தப் பயிற்சியின் நோக்கம் என்ன?

ஸ்ரீஸ்ரீ: உனது பெயருடன் உனக்குள்ள அடையா ளம் உன் சித்தத்தில் மிக ஆழமாகவும் அழுத்த மாகவும் பதிந்துள்ளது. எனது பெயரை நீ விட்டு விடும்போது நீ சுதந்திரத்தை அனுபவிக்கிறாய்.

அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

அங்குசம்

இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும், குத்தி அடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியையும் உடையது. நீள மாக கழிகளில் செருகி இருப்பார்கள். திருமுரு காற் றுப்படையில் முருகப்பிரானது கரங்களில் ஒன்றில் "அங் குசம் கடாவ ஒருகை" என்று நக்கீரர் குறிப்பிடுவார்.

பாசம்

பாசம் என்பது பகைவர்களின் கையையும் கால்க ளையும் கட்டப் பயன்படும். ஒரு கயிறு அல்லது இர ண்டு மூன்று கயிறுகள் சேர்ந்து அமைந்ததாகும். எளி தில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சு இடப்பட்டு இருக்கும்.

வில்

வள்ளிநாயகியை அடைய முருகன் எடுத்த வேடன் கோலத்தில் வில்லும் அம்பும் உண்டு. மூங்கில், சிலை என்னும் மரம் முதலான வளை யக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது வில். இந்த வில்லானது இரு தலையிலும் தோல் அல்லது நார்க்கயிற்றால் கட்டப்பட்ட நாண் இருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக்கட்டி அதன் நடுவில் அம்பை வைத்து விடுவார்கள். எவ்வளவுக் கெவ்வ ளவு வில்லின் வளையும் நாணின் உறுதியும் இழுத்துவிடுபவன் பலமும்இருக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அம்பின் வேகமும், அது தைக்கும் வன்மை யும் அதிகரிக்கும். நுனியில் விஷம் தொய்த்து வைப்ப தும் உண்டு. அம்பு நுனி பிறைமதி போன்ற அமைப்பி லும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

(தொடரும்)

மீண்டும் சறுக்க விட்டது சென்னை

வெற்றியை உறுதி செய்தது கொல்கத்தா

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 21 ஆவது லீக் ஆட்டத்தில நேற்று முன்தினம் சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி, அந்த அணியின் திரிபாதி, சுக்மன் கில் ஆகியோர் கொல்கத்தா அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

12 பந்துகளை சந்தித்த கில் 11 ரன் எடுத்த நிலையில் ஷார்துல் தாகூர் பந்து வீச்சில் வெளியேறினார்.

அடுத்து வந்த நிதீஷ் ராணா 9 ரன், சுனில் நரைன் 17 ரன், மோர்கன் 7 ரன், ரசல் 2 ரன் எடுத்து அடுத்தடுத்து வெளியேறினர்.

ஆனால், ஒரு பக்கம் தொடர்ந்து விக்கெட்டுகள் சரிந்து கொண்டிருந்த நிலையிலும்

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய ராகுல் திரிபாதி 51 பந்துகளில் 3 சிக்சர்கள், 8 பவுண்டரிகள் உட்பட 81 ரன்கள் குவித்து பிராவோ பந்து வீச்சில் வெளியேறினார்.

இறுதியில் 20 ஓவர் முடிவில் கொல்கத்தா அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 167 ரன்கள் எடுத்தது.

சென்னை தரப்பில் பிராவோ அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, 168 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஷேன் வாட்சன், டுபிளசிஸ் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

10 பந்தில் 17 ரன் எடுத்த நிலையில் ஷிவம் மாவி பந்து வீச்சில் டுபிளசிஸ் வெளியேறினார்.

அடுத்து வந்த அம்பதி ராயுடுவுடன் ஜோடி சேர்ந்த வாட்சன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 27 பந்துகளைச் சந்தித்த ராயுடு 30 ரன்னில் வெளியேறினார். சிறப்பாக ஆடிய வாட்சன் 40 பந்தில் 6 பவுண்டரிகள், 1 சிக்சர் உட்பட 50 ரன்கள் எடுத்து நரைன் பந்து வீச்சில் வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய கப்டன் டோனி 12 பந்தில் 11 ரன்கள் எடுத்து சகரவர்த்தி பந்தில் போல்ட் ஆகி வெளியேறினார். சாம் கரன் 17 ரன்னில் வெளியேறினார்.

இதையடுத்து, பிராவோ களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கேதார் ஜாதவ் களமிறங்கினார். கடந்த சில ஆட்டங்களில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜாதவ் இப்போட்டியில் சிறப்பாக ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்தப் போட்டியிலும் அவரின் ஆட்டம் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தது.

களத்தில் இருந்த மற்றொரு வீரரான ஜடேஜா 8 பந்தில் 1 சிக்சர் 3 பவுண்டரிகள் உட்பட 21 ரன்கள் குவித்திருந்தார். ஆனால் போட்டியின் முக்கிய கட்டத்தில் 12 பந்துகளை சந்தித்த கேதார் ஜாதவ் 7 ரன்கள் மட்டுமே எடுத்திருந்தார்.

இதனால், 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழந்த சென்னை அணி 157 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால், கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் 10 ரன்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தோல்வியடைந்தது. (4)

கொரோனா அச்சம்

மூடப்பட்டது கோல்ப் கிளப்



கொழும்பு ரோயல் கோல்ப் கிளப் நேற்று முன்தினம் முதல் மூடப்படும் என்று அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ரோயல் கோல்ப் கிளப்பில் பணிபுரியும் ஒருவரின் மகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் மகள் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் என்று ரோயல் கோல்ப் கிளப் நிர்வாகம் தனது உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த நபர் மற்றும் அவரது குடும்பத்தினர் பி.சி.ஆர். சோதனைக்கான அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேநேரம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கோல்ப் கிளப் மூடப்படுவதுடன் ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக குறித்த நபருடன் தொடர்புகளை வைத்திருந்த தொழிலாளர்கள் மீது பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (4)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

ஈகிள் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

கோல்டன் பிரதர்ஸ் சம்பியன்

ஈகிள் விளையாட்டுக் கழகத்தின் 11 ஆவது வருட நிறைவையொட்டி வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஒன்பது பேரைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியானது நான்கு நாட்களாக இடம்பெற்று இறுதிப் போட்டியில் யங்ஸ்டார் மற்றும் கோல்டன் பிரதர்ஸ் ஆகிய அணிகள் மோதிக் கொண்டன.

ஆட்ட நேரம் முடிவுறும் வரையில் இரு அணிகளும் எந்த ஒரு கோல்களும் பெறாத நிலையில் பெனால்ட்டி முறையில் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி , 6:5 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ட் ஸ்டார் அணியை தோற்கடித்து கோல்டன் பிரதர்ஸ் அணியினர் வெற்றி பெற்றிருந்தனர்.

வெற்றி பெற்ற அணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான, செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், திலீபன் மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோரால் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டது. (4-299)

வடமாகாண குத்துச் சண்டை போட்டி

நடப்பாண்டுக்கான வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் முதலிடத்தையும், ஆண்கள் அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் கடந்த 02ஆம் திகதி தொடக்கம் 05ஆம் திகதி வரை நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் வடமாகாண அனைத்து மாவட்டங்களுக்கு மிடையிலான குத்துச் சண்டை போட்டியிலேயே முல்லைத்தீவு மாவட்ட அணியினர் முதலாவது மற்றும் இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் பெண்கள் அணியினருக்கான போட்டியில் வவுனியா மாவட்டம் இரண்டாமிடத்தையும், மன்னார் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை வவுனியா மாவட்டமும், மூன்றாமிடத்தினை மன்னார் மாவட்டமும் பெற்றுக்கொண்டுள்ளன.

மேலும் வவுனியா மாவட்ட பெண்கள் பிரிவில் பங்குபற்றிய ஒரு குழந்தையின் தாயாராகிய திருமதி.க.சுலக்சி போட்டியில் வெள்ளிப்பதக்கம் ஒன்றை பெற்றுள்ளார்.

மேலும் இவர் தேசிய ரீதியில் பங்குபற்றிய வீராங்கனைகளுடன் போட்டியிட்டு பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

ரயில் மோதியதில்...

தொலைவில் நேற்று அதிகாலை 4 மணி யளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.

உயிரிழந்தவர் சுமார் 45 வயது மதிக் கத்தக்கவர் என தெரிய வருகின்றது. சட லம் அடையாளம் காணப்படவில்லை. சட லம் மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும் பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரயில் மோதி 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண் மித்த பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் உயிரி ழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ம-3,100,285)

வவுனியாவில்...

இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரது தலையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்ட நிலையில் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர்கள் இருவரும் மரணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த இருவரது சடலங்களும் வவுனியா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளதுடன், குறித்த இருவரும் ஹெல்மட் பட்டியை பூட்டாமல் சென்றமையாலேயே தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ள தாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியான 41 வயதுடைய முகமது மாகீர் என்ற நபர் உயிரிழந்துள்ளார். மற்றைய நபரின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

விபத்தில் உயிரிழந்தவர்களின் தொலை

பேசியின் இலக்கங்களை தொடர்பு கொண்டு சடலத்தினை அடையாளம் காணும் நட வடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(ம-3,250,299)

சிலாபத்தில்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோயாளியிடம் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் நேற்று உறுதிப்படுத் தப்பட்டது.

அவர் தற்போது இரணவில கோவிட் - 19 சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ம-3)

மினுவாங்கொட...

கொட பொலிஸ் நிலைய சிற்றுண்டிச்சாலை யில் பணிபுரியும் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நபரின் மகன் மினுவாங் கொட ஆடைத் தொழிற்சாலையில் பணி யாற்றுபவர். அவருக்கும் கொரோனா தொற்று உறுதியானது.

தற்போது, வெளியாட்கள் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்புட்டுள்ளது. (ம-3)

மது விற்பனை...

காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டதாக கலால்வரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆரியதாச போதர கம தெரிவித்தார்.

எனினும் மதுபானசாலைகளை மூடு வது தொடர்பாக இதுவரை எவ்வித தீர் மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தடுப்புப் பிரிவு வழங்கும் ஆலோசனைக்கு அமைவாக இது குறித்த இறுதி தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ம-3)

1053 ஆக...

ஆடைத் தொழிற்சாலை தொற்றாளர் களு டன் தொடர்புடைய மேலும் 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கம்பஹா கொத்தணி கொரோனா தொற்று மொத்த எண் ணிக்கை ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜென ரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (ம-3)

வாள்வெட்டுடன்...

நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்ட அலை பேசியில், பிரான்ஸில் தங்கியுள்ள நவாலி யைச் சேர்ந்த ஒருவரால் பல வன்முறைச் சம்பவங்களை அங்கிருந்து கொண்டு இயக்குவதற்கான ஆதாரங்கள் கிடைத் துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்ட னர்.

அத்துடன், கிளிநொச்சியில் தலை மறைவாகியிருந்து அங்கு தாக்குதல் நடத்த திட்டமிட்ட நிலையில் அவரது சகா கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து இரண்டு மோட் டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள் ளன. அவற்றில் ஒன்று அவரது கொக்கு வில் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சிறப்பு அதிரடிப் படையின ரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வைத்து மானிப் பாயைச் சேர்ந்த இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர்

நீர்வேலி, இணுவில், உடுவில், மானிப் பாய் மற்றும் ஓட்டுமடத்தில் வன்முறைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

ஆசிரியர்...

றிடங்களை நிரப்புவதற்கான திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருவதாக நேற்று பாராளுமன்றில் கல்வி அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுவது குறித்த பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச் சர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

மேலும் கல்வி அமைச்சு முழு நாட் டுக்கும் சேவை செய்ய உறுதி பூண்டுள்ள துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கு தனிப்பட்ட விஜயம் செய்து இந்த விடயம் குறித்து ஆராய நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

சுகாதார நடை...

பலருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கை யில் கொரோனா தொற்று அபாயம் மீள ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்று பரம்பலை தடுப்பதற்கு சுகாதார அமைச்சி னால் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்து திணைக்களங் கள் மற்றும் நிறு வனங்களில் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொள்வதாக யாழ்.மாவட்ட அர சாங்க அதிபர் க.மகேசன் அறி வுறுத்தி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங் களுக்கு அனுப்பி வைத்துள்ள அறி வுறுத்தலில் தெரி வித்துள்ளதாவது.

அனைவரும் கட்டாயமாக முகக் கவசம் அணிதல் வேண்டும்.

பணிபுரியும் போது இருவருக்கு இடையில் ஆகக் குறைந்தது 1 மீற்றர் (1m) சமூக இடை வெளி பேணப்பட வேண்டும். நாளாந் தம் அலுவலகத் திற்கு வரும் ஊழி யர்கள் மற்றும் சேவை பெறுநர் கள் சவர்க்காரமிட்டு அல்லது தொற்று நீக்கி திரவத்தினை பயன்படுத்தி முறைப் படி கை கழுவ வேண்டும்.

நாளாந் தம் அலுவலகத்திற்கு வரும் ஊழியர்கள் மற்றும் சேவை பெறுநர் களின் உடல் வெப்பநிலை அவதானிக்கப் படல் வேண் டும். வெளியிடங்களில் இரு ந்து சேவை நாடி வருபவர் களை சந்தித்த பின் பும் கட்டாயமாக சவர்க் காரமிட்டு அல்லது தொற்று நீக்கி பாவித்து கைகளை சுத்தப்படுத்த வேண்டும். சேவை நாடிகளுக்கு வழங்குவதற்கென தனியாக ஒரு பேனா வைத்திருப்பதுடன் அதனை தொற்று நீக்கியால் சுத்தப்படுத்திய பின்பே இன் னொருவருக்கு வழங்க வேண்டும்.

அலுவலக உத்தியோகத்தர்களுக்கு காய்ச்சல், தொண்டை நோ, மூக்கால் நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் விடுமுறையில் வீட்டில் இருப்பதுடன் மருத்துவ ஆலோசனையும் பெற வேண் டும். மேலதிகமான விளக்கங்களுக்கு திணைக்கள மற்றும் நிறுவனத் தலை வர்கள் வங்கிகள் மற்றும் தனியார் நிறு வனங்கள், சுகாதார அமைச்சினால் 2020 ஏப்ரல் 17ஆம் திகதி உபவழிகாட்டி அறிவுறுத்தல்களாக வெளியிடப்பட்ட "வேலைத்தளங்களில் கொவிட் 19 பரவு வதற்கான முன்னாயத்தங்கள் மற்றும் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற் கான செயற்பாட்டு வழிகாட்டுதல்கள்" எனும் சுற்றறிக்கையினை சுகாதார அமைச்சின் இணையத்தளத்தினூடாக பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

நாட்டை முழுமை...

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கம்பஹா மாவட்டத்தில் கொவிட் -19 வைரஸ் தொற்று பரவலடைந்ததை தொட ர்ந்து ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் ஏனையப் பிரதேசங்களில் மக்கள் அன்றாட கொள்வனவுக்கு மாறாக அத்தியாவசிய உணவு பொருட்களை கொள்வனவு செய்கின்றமை காண முடி கிறது.

நாட்டை முழுமையாக முட க்க வேண்டிய தேவை ஏதும்

24





கொரோனாவிற்குள் 20ஐ இரகசியமாக நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி

எதிர்க்கட்சி கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முழுநாடும் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அச்சமடைந்துள்ள நிலையில், அரசாங்கம் இரகசியமாக 20 ஆவது திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முயற்சித்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கொரோனா வைரஸ் பரவலை வெற்றிக் கொள்வது தொடர்பிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிலைமையில் நாடு இல்லை என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் தாங்கள் கொரோனா வைரஸ் பரவலை வெற்றிக் கொண்டதாக கூறி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், தற்போது வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளிலே தற்போது அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனால் கம்பஹா மாவட்டம் முழுவதிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற் கொள்ளாமல், அரசியல் இலாபத்தை கருத்திற்கொண்டு நாங்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் தெரிவிக்கவில்லை. வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது என்றால் தற்போதைய நிலைமைக்கு ஊரடங்கை அமுல்படுத்துவதே மிகப் பொருத்தமாகும்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் முழு நாடும் அச்சமடைந்துள்ள நிலைமையில், அரசாங்கம் இரகசியமாக அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பதாகவும் தெரியவந்துள்ளது. இந்த முயற்சியை அரசாங்கம் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும். 20 ஆவது திருத்த சட்டமூலத்தில் காணப்படும் சிக்கலான ஏற்பாடுகள் தொடர்பில் எதிர்ப்பொலிகள் எழுந்துள்ள நிலையில், அதனை கருத்திற்கொள்ளாது அரசாங்கம் செயற்படுவது முறையற்ற செயற்பாடாகும்.

தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் பரவலிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பது தொடர்பிலே அரசாங்கத்தின் கவனம் இருக்க வேண்டுமே தவிர, 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பில் கவனம் செலுத்தக் கூடாது. அது மட்டுமன்றி ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு அவசியமான பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் வைரஸ் பரவலின் காரணமாக இல்லாவிட்டாலும், மக்கள் போதிய உணவின்றி உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றார். (ம-03)

பெருமளவு மஞ்சள் பொதிகள் அனலைதீவுப் பகுதியில் மீட்பு

கைதாகிய இருவர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவில் பலநூற்றுக்கணக்கான கிலோகிராம் நிறைகொண்ட மஞ்சள் கட்டிப்பொதிகள்மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு வீடுகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் படைத்தரப்பினர் அவற்றை மீட்டிருப்பதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த மஞ்சள் பொதிகள் இந்தியாவில் இருந்து வந்தனவா? என்ற சந்தேகம் நிகழ்வதால் சம்பந்தப்பட்ட இருவரும் மஞ்சள் பரிமாற்றத்தின் போது யாரைத் தொடர்புகொண்டார்கள் என்ற கோணத்திலும் விசாரணைகள்இடம்பெற்றுவருவதாகவும் அனலைதீவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-03)

யாழ். பல்கலை...

கலை நிர்வாகம் ஈடுபட்ட போது அங்கு பதற்றநிலை ஏற் பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் மாலை பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கிடையில் தர்க்கம் இடம் பெற்றுள்ளது. இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தை நாடியுள்ளனர்.

இதன்போது தர்க்கத்தை சுமுகமாக தீர்க்க முயன்றபோது காவலாளி மற்றும் விரிவுரையாளர்கள், தம்மீது தாக்குதல் நடத்தியதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சம்பவத்தையடுத்து யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக உரியதீர்வு எமக்கு வழங்கப்பட வேண்டும் என தெரிவித்த மாணவர்கள் நேற்று இரவு யாழ். பல்கலையில் போராட்டம் நடத்தினர்.

இன்று மாலை 3 மணியளவில் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் தவிர்ந்த பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் மூலம் நேற்று நடைபெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதாக பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா உறுதியளித்ததன் பிரகாரம் மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது. (ம-03)

48 மணித்தியால...

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் நவீன். டீ. சொய்சா இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு பொது மக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டும் என்பதுடன் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், இந்த காலப்பகுதியில் அதிகமான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோல், பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படாவிட்டால் சமூகத்தில் உள்ள கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பது கடினமானதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் நாட்டில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலான நிலையை கட்டுப்படுத்துவது எவ்வாறு? அதற்காக நடைமுறைப் படுத்தப்பட உள்ள சுகாதார திட்டங்கள் என்ன? என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். (ம-03)

நாட்டை முழுமையாக...

இதுவரையில் எழவில்லை. அரசாங்கமும் அவ்வாறான தீர்மானத்தை எடுக்கவில்லை. கொவிட்- 19 வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணும் பிரதேசங்கள் மாத்திரமே தற்போது ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

நாடு முழுமையாக முடக்கப்படும் என பொது மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். அத்தியாவசிய பொருட்களை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உணவு பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது. தற்போது ஊரடங்குசட்டம் பிறப்பித்துள்ள பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவு பொருட்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கை பிரதேச செயலக பிரிவு ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-03)

காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் ஊரெழு பொக்கன் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இராச வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேசிய கல்வியற் கல்லூரி வீதி, கோப்பாயில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. (4214)

குரு : 077 468 3354, 076 221 2037

மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331

வேலை வாய்ப்பு

விளம்பரத்துறையில் துண்டுப்பிரசுரம் விநியோகம் மற்றும் பனர் கட்டுதல் போன்ற வேலைகள் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

நாள் சம்பளம் 1000/= (C-308)
(30 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

0768226244

உடனடி வேலை வாய்ப்பு

கணக்கு உதவியாளர்

நிறுவனம் தொடர்பாக போக்குவரத்து செய்யக்கூடியவரும் கணக்கியல் சார்பான போதிய அறிவும் அனுபவமும் இருத்தல் அவசியம். (C-308)

சம்பளம் 30'000/=
(40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

777 069 777

அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பம்
08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட,
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS

0768226244 (C-308)

சிவமயம்

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
காரைநகர்

வருடாந்த பொதுக்கூட்டமும், கணக்கறிக்கை சமர்ப்பித்தலும் தொடர்பான கூட்டம் 2020.10.11 ஞாயிற்றுக்கிழமை மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை மண்டபத்தில் நடைபெற இருந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள Covid 19 நிலைமை காரணமாக இப் பொதுக்கூட்டம் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருவதுடன் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்
மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை,
சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) - காரைநகர். (4213)

வேலை வாய்ப்பு

இல. 46, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(கலட்டிச் சந்திக்கு அருகாமையில்)
எனும் முகவரியில் இயங்கும் யாழ். மிருக வைத்திய சத்திரசிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

வயதெல்லை -
20 தொடக்கம் 35 வரை (4212)
தொடர்புகளுக்கு
077 263 9573

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-308)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.